வேதாகம வார்த்தையைப் போதிக்கும்....

# சத்தியவசனம்

வருடம் 40 வெளியீடு 1




BACK TO THE BIBLE
ஜீவிதாலோகய சத்தியவசனம்

பூச்சாண்டிப் பொம்மைகள்...
பக்கம் 04

சஞ்சிகை அடிச்சுவடுகள்...
பக்கம் 15

துதிக்கவிடாத தடைகற்கள்...
பக்கம் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர் 2011 - ஜனவரி - பெப்ரவரி 2012

நிர்வாக இயக்குனர் :
திரு. மயுக பெரேரா
முகாமையாளர் :
திரு. ரவிசங்கர் சண்முகம்
சஞ்சிகை ஆசிரியர் :
திரு. வஷ்னீ ஏனர்ஸ்ட்

வருடம் - 40 வெளியீடு - 1

# சத்தியவசனம்

## சஞ்சிகை


04 பூச்சாண்டிப் பொம்மைகள்
திரு. இன்பம்.

06 எதிர்கால மகிமை
ஓர்ட். எல். மோறோ

10 சரீரத்தின் இசைவு
டாக்டர் தியோடர் எச். எப்

15 சஞ்சிகை அடிச்சுவடுகள்...

19 கேள்வி - பதில்
டாக்டர் ஆர்.ஸ்டான்லி

22 நன்றி செலுத்து...!
திரு. மயுக பெரேரா

23 துதிக்கவிடாத தடைகற்கள்
சகோதரன் வஷ்னீ ஏனர்ஸ்ட்

26 ஏதேன்

29 சிறுவர் சோலை


BACK TO THE BIBLE

SATHIYAVASANAM
P.O. Box 1012,
Colombo, Sri lanka.
Tele : 011-2695441,
Fax : 011-2698843
E-mail : svsl@sltnet.lk
Web : www.sathiyavasanam.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதன்மை ஆசிரியரிடமிருந்து....

Mayukha Perera
Managing Director
Back To The Bible

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

40 வருடங்கள் என்பது ஒரு நீண்ட காலம்! இந்த 40 வருடங்களில் அநேக காரியங்கள் நடைபெற்றுள்ளன. அநேக மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. இது தமிழ்மொழியின் சத்தியவசன சஞ்சிகைக்கும் அதன் இணைபிரதியான அனுதினமும் தேவனுடன் தியானநூலுக்கும் பொருத்தமானதாகும். சத்தியவசனம் சஞ்சிகையானது கடந்த 40 வருடங்களாக வெளியீடுகள் எதுவுமே தவறாமல் வெளியிடப்பட்டு வந்துள்ளது, தமிழ் மக்களுக்காக 12 பக்கங்களுடன் ஆரம்பமான இச் சஞ்சிகையானது 1500 பிரதிகளுடன் வெளியிடப்பட்டு வந்தது. தற்பொழுது, இலங்கையில் மாத்திரம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை 32 பக்கங்களுடன் 6000 பிரதிகள் நாடெங்கிலும் உலகெங்கிலும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

எமது சஞ்சிகையானது சில தனிப்பட்ட நபர்களின் தரிசனத்தின் விளைவாக உருவானது. அப்போதைய தேவைகளை அறிந்து, தேவனுடைய அழைப்பினையும் உணர்ந்து அதில் கவனம் செலுத்தியதினால் இது உருவானது, அநேகருடைய உண்மைத்துவ சேவையின் காரணமாகவும் கடின உழைப்பின் விளைவாகவும் இன்று பாரியதொரு வளர்ச்சியடைந்துள்ளது. 40 வருடங்களில் அநேக காரியங்கள் மாற்றமடைந்துவிட்டன. இதற்குப் பக்கபலமாக இருந்தவர்கள், அதன் பக்கங்கள், பிரதிகள், வடிவமைப்புக்கள், வாசகர்கள் என பல மாற்றமடைந்துள்ளது. இந்தப் பணியை தொடர்ந்து முன்னெடுத்துவரும் தேவனுனின் உண்மைத்துவமும் அவருடைய வார்த்தையும் மாத்திரமே மாறாதுள்ளது. அத்துடன் அவருடைய வார்த்தையை அறிவிப்பதில் எமது அர்ப்பணமே சேர்ந்துள்ளது.

தேவன் செயலாற்றிய விதங்களை திரும்பிப் பார்க்க கிடைத்த சிறந்த தருணமாக, 40 வருட முடிவில் அவருடைய வாக்குதத்தத்தையும் உண்மையையும் கண்டு அதற்கு நன்றிகூறாமல் இருக்கமுடியாது. அத்துடன் வரப்போகின்ற வருடங்களில் ஆண்டவர் என்ன செய்யப்போகின்றார் என்கிறதான எதிர்பார்ப்புடனும் தைரியத்துடனும் முன்நடந்துசெல்ல சிறந்த தருணமாகவும் இது உள்ளது.

பிரியமானவர்களே, இந்தச் சஞ்சிகை ஊழியத்தின் ஊடாக தேவன் செய்த அனைத்து காரியங்களுக்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துகின்றோம். இச்சஞ்சிகையை ஒரு கருவியாகப் பயன்படுத்தி தேவன் உங்களை தைரியப்படுத்தி, இயேசுவின் சீஷர்களாக வாழ உற்சாகப்படுத்தியதுண்டானால், உங்கள் கருத்துக்களை எமக்கு தபாலின் ஊடாகவோ, மின்னஞ்சல் ஊடாகவோ அறியத்தருவீர்களாயின், அது இப் பணியிலே எம்மை மேலும் உற்சாகப்படுத்துவதாக அமையும். இன்னுமொரு 40 வருடத்திற்குள் கடந்துசெல்ல எமக்காக தொடர்ந்தும் ஜெபித்துக்கொள்ளுங்கள். தேவன் எம்மை நம்பி ஒப்படைத்துள்ள இந்த உத்தரவாத பணியினை நிறைவேற்றும்வண்ணமாக உண்மைத்துவத்துடன் பணியாற்ற வாஞ்சையையும் தரிசனத்தையும் தேவன் புதுப்பிக்க வேண்டுமெனவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

எல்லா மகிமையும் தேவனுக்கே உண்டாவதாக!

கர்த்தரின் பணியில்,

**மயுக பெரேரா**

பி.கு: தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளிவரும் சஞ்சிகைகள் யாவும் உங்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்குமென நம்புகின்றோம். மற்றவர்களும் இதில் சந்தாதாரராகும்படி அவர்களுக்கு இதை அறிமுகப்படுத்தி வையுங்கள். அல்லது அவர்களுடைய விபரங்களை எமக்கு அறியத்தாருங்கள். நாம் அவர்களுக்கு சஞ்சிகையின் ஒரு பிரதியை உடனடியாக இலவசமாக அனுப்பி வைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- இன்பம் -

# பூச்சாண்டிப் பொம்மைகள்

மனித சமுதாயம் உருவான காலம் தொடக்கம் இன்றுவரை மனிதர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு, விளையாட்டு பொம்மைகளை வாங்கிக் கொடுக்கின்றனர். அமெரிக்காவிலுள்ள ஒரு நிறுவனம் பாபி பொம்மைகளை உருவாக்க, அவை அரைகுறை ஆடைகளுடன் இருப்பதாக கூறி, ஈரானியர்கள் முக்காடிட்ட பொம்மைகளை உருவாக்குகின்றனர்.

கி.மு 2456ல் ஏற்பட்ட ஜலப்பிரளயத்தில், இறைவனால் காப்பாற்றப்பட்ட நோவாவின் பூட்டனான நிம்ரோத், "கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைக்காரனாக இருந்தான்" என்று வேதாகமம் கூறுகின்றது (ஆதியாகமம் 10:9). இவன் சிநேயார் தேசத்திலுள்ள பாபிலோன், ஏரேக், அக்காத், கல்னே ஆகிய இடங்களை ஆட்சிபுரிந்தவன். இவன் ஒருநாள் திடீரென மரணமடையவே, அவனது மனைவியான செராமிஸ்..... அரசனாகிய நிம்ரோத் மீண்டும் பிறப்பான் என விளம்பரப்படுத்தி, ஒரு தேவ தாய் ஒரு குழந்தையை தூக்கி வைத்திருப்பது போன்ற பொம்மைகளை உருவாக்கி, பூமியெங்கும் மனிதர் குடியிருந்த பகுதிகளெங்கும் அச்சிலைகளை அனுப்பிவைத்தாள். பாபிலோனிலிருந்து மனித நாகரீகம் மட்டுமல்ல! இப்பொம்மை வணக்கமும் கூடவே பூமியெங்கும் பரவியது!

ஈராக்கில் பிறந்த ஆபிரகாம் இப்பொம்மை வணக்கத்தில் கலந்துகொள்ளாதவனாக இருந்ததால், ஏக இறைவன் அவனது சந்ததியில், தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை பிறக்க வைப்பதற்காக, அவனை மத்திய தரைக் கடலோரமாக போய் குடியேறும்படி கட்டளையிட்டார். பூவுலகின் நடுமையமாக கருதப்படும் எருசலேம் மாநகரில் சாத்தானின் கபாலமாகிய பிசாசின் தலையை வெற்றிகரமாக நசித்து, அவனது போலிவேடத்தை அழிப்பது தேவனுடைய உன்னதத் திட்டமாக இருந்தது. 2000 ஆண்டுகளுக்கு முன் இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கி சர்வலோக பெரும் யாகமாகிய பாவநிவாரண பூசைப்பலியை நிறைவேற்றினார். அந்த யாகத்தில் சிந்தப்பட்ட தேவ குமாரன் இயேசுவின் இரத்தத்திற்கூடாகவே, மனித குலத்தினரின் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்பதும், மன்னிக்கப்பட்ட மனிதர்கள் படிப்படியாக தூய்மையடைந்து புனிதர்களாகின்றனர் என்றும் அவர்கள் தேவலோக பிரஜைகள் ஆகின்றனர் என்றும் வேதாகமம் கூறுகின்றது.



பஞ்சத்தின் நிமித்தம் எகிப்தில் குடியேறிய ஆபிரகாமின் சந்ததியினர், 430 வருடங்களின் பின் அங்கிருந்து மோசேக்கூடாக... செங்கடலைக் கடந்து சீனாய் மலையோரமாக வரும்போது.... அக்கொடுமுடியில் தோன்றிய தேவன், நீங்கள் "என்னையன்றி வேறு தெய்வத்தை வணங்கக் கூடாது" என்றும், பொம்மை வணக்கமாகிய "சிலைகளை உருவாக்கக் கூடாது" என்றும், அடுத்த வீட்டுக்காரன் மனைவிமேல் மோகங்கொள்ளக்கூடாது என்றும்... இவ்வண்ணமாக மொத்தம் பத்து அதிவிசேஷ கட்டளைகளை தமது விரல்களால் எழுதிக்கொடுத்துள்ளார் (யாத். 20:1-17).

மாமன்னன் சாலமோன், தேவாதி தேவனுக்கு ஜெருசலேமில் மாபெரும் தேவாலயத்தைக் கட்டிய போதிலும் யூதர்கள், அயல் நாட்டினரின் பொம்மைகளையே வணங்க ஆரம்பித்தனர். இறைவன் தமது தீர்க்கதரிசிகளைக் கொண்டு அவ்வணக்கம் படுபிழைகள் என எச்சரித்தபோதும் எருசலேமில் வாழ்ந்தவர்கள் திருந்தவேயில்லை! எனவே இறைவன், நாமறிந்த எமது இன்றைய




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவரைப்போன்ற தோற்றமுடைய பாபிலோனிய பேரரசனான நேபுகாத்நேச்சரைக் கொண்டே, யூத தேசத்தை அழித்தொழிக்க முடிவெடுத்தார்.

கி.மு 606ல் பாபிலோனிய இராணுவம் ஜெருசலேமிற்குள் நுழைந்து யோயாக்கீம் என்ற யூத அரசனைப் பிடித்து, அவனைக் கொலை செய்து, அவனுடலை பனியிலும் சூரிய உஷ்ணத்திலும் வாட்டியெடுத்து இறுதியில் ஒரு செத்த கழுதையை புதைப்பதுபோல் புதைக்கவும் (எரேமியா 36:30) பின்பு 11 வருட வித்தியாசத்தில் இறுதி யூத அரசனான சிதேக்கியாவைப் பிடித்து, அவனது கண்களுக்கு முன்பதாகவே அவனது பிள்ளைகளை கொலைசெய்து, அவன் இரு கண்களையும் குருடாக்கி, அவனை பாபிலோனுக்கு இழுத்துச் செல்லவும் தேவன் அனுமதித்தார். (எரேமியா 52:10-12). இவ்வண்ணம் யூத அரசியல் பெரும் பேரழிவாக முடிந்ததற்கு, தேவாதி தேவன் எக்காலமும் அருவருக்கும் இந்தப் பொம்மை வணக்கங்களே மூலகாரணங்களாக அமைந்தன.

விக்கிரக பொம்மை வணக்கங்கள் பெரும் பேரழிவுகளை ஏற்படுத்துமென்பதை பரிசுத்த வேதாகமமும், 2009 மே மாதம்வரை இலங்கையில் நடைபெற்ற இனவழிப்பு சம்பவங்களும் நமக்கு உணர்த்துகின்றன. இன்று மனிதர் மெய்யான தெய்வம் எது? மனிதர்களால் அழகுபடுத்தப்பட்ட பொம்மைகள் எது? என்பதை பிரித்து அறியமுடியாமல் பட்டோடு பட்டுடுத்தி, மின்னும் பொன் ஆபரணங்களால் தங்களை அலங்கரித்து, ஊர்வலமாக வலம் வந்து, இப்பொம்மைகளைத் தரிசித்து அவற்றிடமிருந்து தமக்குப் பெரும் ஆசிகளை பெற்றுக்கொள்வதாக இம்மக்கள் எண்ணிக்கொள்கின்றனர். ஆனால் அவ்வெண்ணங்கள் யாவும் உண்மையானவைகள் அல்ல!

தீர்க்கதரிசியான எரேமியா, யூத தேச மக்களுக்கும் யூத அரசர்களுக்கும் உவமித்துக் கூறிய (rmt) தோமேர் என்ற எபிரேய சொல்லை.... ரோமன்கத்தோலிக்க திண்டிவன மொழிபெயர்ப்பில் "வெள்ளரித்தோட்டத்தில் பறவையோட்டவைக்கும் பூச்சாண்டி பொம்மைகள்" என்றும், வேறு ஒரு பிரதியில் "சோளக்கொல்லை பொம்மை" என்றும் திருவிவிலியத்தில் "வெள்ளரித்தோட்ட பொம்மை" என்றும் மிகச்சரியாக மொழிபெயர்த்துள்ளனர். (எரேமியா 10:5) இன்று பல கிறிஸ்தவ வீடுகளில் கூட வைக்கோல் அடைக்கப்பட்ட, இக் கரிப்பானை தலையுடைய "கத்தரி தோட்டத்து வெருளிகள்" அழகிய சிலைகளாகவும் கண்ணாடி பிரேம்களுக்குள் அச்சடிக்கப்பட்ட வர்ணப் படங்களாகவும் காணப்படவில்லையா? யூதருக்கொரு சட்டம்! நமக்கொரு சட்டமா?



இப் பூச்சாண்டி வணக்கத்தை, இறைவன் பெரும் பாவமாக கணித்து, அவ் வணக்கத்தினரை தண்டிப்பது மாத்திரமல்ல, அவர்களுடைய பிள்ளைகளையும் அவர்களுடைய பேரப்பிள்ளைகளையும், அவர்களது பூட்டப்பிள்ளைகளையும் தண்டிப்பேன் என்றும் எச்சரித்துள்ளார்.

"உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்து பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன் என்று இவ்வுலகத்தை சிருஷ்டித்த இறைவனாகிய ஜெகோவா தமது விரல்களால் எழுதியுள்ளார்.

இன்று சத்திய மார்க்கமாக கிறிஸ்தவம் மட்டுமே துலங்கிக் கொண்டிருக்கின்றது. "தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து அறிவதே சதாகால வாழ்வு" என்று யோவான் 17:3 கூறுவதால் நீங்கள் விரைவாக அவரைக்குறித்து அறிய தீர்மானிக்கவேண்டும். மீண்டுமொரு அரிய சந்தர்ப்பம் உங்களுக்கு ஒருபோதும் கிடைக்காமல் போகலாம். எனவே இக்காலத்தையே நல்ல சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பூச்சாண்டிகளை நீங்கள் வணங்குவீர்களானால் அதற்கு சரியான பதில்.... உங்களருகே நிற்கும் ஆயுததாரியின் இடுப்பில் செருகப்பட்டிருக்கும் ஆயுதமாகும் என்பதை கீழ்கண்ட வசனம் உறுதி செய்கின்றது. "தேவன் நீதியுள்ள நியாயாதிபதி; அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன். அவன் மனந்திரும்பாவிட்டால் அவர் தம்முடைய பட்டயத்தைக் கருக்காக்குவார்; அவனுக்கு மரணாயுதங்களை ஆயத்தம் பண்ணினார்; தம்முடைய அம்புகளை அக்கினி அம்புகளாக்கினார்" (சங்.7:11-22). எனவே ஒருநாள் அவன் உன்னைப் பிடித்து ஏதோ ஒரு காரணத்தை சொல்லி...., "நீ ஒரு படுபிழையான நபர்" என்று உனக்கு ஒரு மகுடமிட்டு நியாயந்தீர்த்து, உன்னை தண்டிப்பதற்கு, எத்தனிப்பதற்கு முன்பதாகவே.... நீ உனது குற்றங்களிலிருந்து விடுபட, கிறிஸ்து இயேசுவை நெருங்கி இன்றே அவர் தரும் பாவ மன்னிப்பை பெற்றுக்கொள்வாயாக! நன்றி! ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர்கால மகிமை

- ஓர்ட். எல். மோறே -

**என்னிடத்தில் வரும் பாவியெவரையும்**
**இகழ்ந்து தள்ளேனே**
**மன்னித்து மேலோக வாழ்வையருள்வேனே**
**வாராயோ பாவி?**

எதிர்காலம் பற்றிச் சிந்தியாத ஒரு மனிதன் ஒன்றில் கோழை அல்லது மடையன். எதிர்காலம் நமக்கு எதிரே இருக்கிறது. நாம் நேர்மையானவர் களாயிருந்தால் அதனை எதிர்நோக்குவோம். அதனைப் பற்றி மேலும் நாம் விளங்கிக்கொள்ள முயல்வோம். கடவுள் மனிதனை மீட்டபோது எதிர்காலத்தில் மனிதன் இச்சிக்கும் நலமானவை அனைத்தையும் அவனுக்காக ஒழுங்குசெய்து விட்டார். மனிதனின் எதிர்காலம் ஒளிமிக்கதாய் இருப்பதால் சிலர் இதைப்பற்றி குறிப்பிடுவது கூட தற்பெருமையாகும் என்பர். அது அப்படியல்ல. மீட்பர் இரத்தக் கிரயமாக செலுத்தியதை நினைத்துப் பார்த்தால், அவரின் புகழுக்கு மேலும் சிறப்பளிக்குமன்றோ!

கடவுளின் பிள்ளைகளுக்காக வைக்கப்பட்டிருக்கும் எதிர்காலச் சிறப்பை விளக்க வார்த்தை இல்லை. இரட்சிப்பினால் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்களை யாரால் விபரிக்கக்கூடும். கடவுளின் வாக்குத்தத்தங்களின் சிறப்பை ஒத்த சிறப்புடைய எதிர்காலத்தை யாரால் சித்தரிக்க முடியும்? கர்த்தரில் நம்பிக்கை வைக்கும் ஆத்துமா அனுபவிக்கும் திருப்தியை விபரிக்க வல்லவன் யார்? நிறைவேறிய நித்தியத்திற்குள் இளைப்பாறும் உள்ளம் பெறுகின்ற உறுதியை அளக்க வல்லவன் யார்? வரப்போகும் மகிமையின் ஆழத்தை உணரத்தக்கவர் யாவன்?

## மீட்பின் மகிமைகள்

"மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டுமென்று" 1தெச. 2:11 ல் தெசலோனிய விசுவாசிகளுக்கு பவுல் ஞாபகப்படுத்தி எழுதினார். மீட்பரில் நம்பிக்கை வைத்துள்ளவர்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்கள் பற்றியும் மீட்பின் மகத்துவங்கள் பற்றியும் நூற்றுக்கணக்கான நூல்கள் எழுதப்பட்டுள்ளன. மீட்புப் பற்றிய பாடல்களால் நம் பாமாலைகள் நிரம்பியுள்ளன.

கவிஞர் பால் உருகும் உள்ளத்தோடு மீட்பின் மகிமையைப் பற்றி சக்திவாய்ந்த கவிதைப் புனைய பல்லாண்டுகளைக் கழித்துள்ளனர். காலம் மெல்ல மெல்ல கடந்துபோகையில் தந்தையர் மைந்தருக்கு மீட்பின் கதைகளைச் சொல்ல தாய்மார்கள் மீட்பின் புகழைத் தம் பிள்ளைகட்கு பாடல்களால் எடுத்துரைத்தனர். உயிர்போகு முன்னே நித்திய சுவிசேஷத்தைப் பிள்ளைகள் உள்ளத்திலே பதித்துவிட விசுவாசிகளின் ஒவ்வொரு சந்ததியும் முயன்றுள்ளது.

தீர்க்கதரிசிகள் அதைப் பிரசங்கித்தனர். இயேசு கிறிஸ்துவின் மீட்பில் உள்ள நம்பிக்கை யால் துணிவுபெற்று வேறு எந்த ஆதரவும் தேடாது வாழ்க்கையை மக்கள் கழித்துள்ளனர். "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர், இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார். கடைசிக் காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய் களிகூர்ந்து, உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும இரட்சிப்பை அடைகிறீர்கள்.

உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்து தீர்க்கதரிசனஞ் சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்து கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள்; தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னக் காலத்தைக் குறித்தாரென்பதையும், அக்காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்" (1பேதுரு 1:3-11) என வேதாகமம் கூறுவதை நம்பி, எதிர்காலத்தை கர்த்தருடைய வார்த்தையின் மூலமாக மட்டும் உற்று நோக்கியோர் தொகை எண்ணிலடங்கா.

"மீட்பு" பற்றி முறைப்படி கூறப்பட்டால் அது ஒருபோதும் தன் கவர்ச்சியை இழக்காத சக்தியாகும். தற்கால இடர்களையும் திகைப்புக்களையும் மேற்கொண்டு எவ்வாறு வாழலாம் என்பதனை வாரந்தோறும் கற்பிக்கும் போதகரின் பொருள் அது. இந்த மீட்பை அளிப்பவரின் ஆறுதலும் நம்பிக்கையுமுண்டு.

மீட்பின் பலாபலன் எண்ணிறைந்ததும் அதிசயமானதுமாய் இருப்பதோடு தற்காலத்துக்கும் வருங்காலத்துக்கும் நமக்கு தேவையானதும் அதுவே. கிறிஸ்துவின் செயலில் நாம் வாழ்வதும், விசுவாசத்தால் இரட்சிப்படைவதும் நம்மை மோட்சத்துக்கேற்றவர்களாக ஆக்குவதோடு இந்த உலகில் முறையாக வாழ ஆயத்தஞ்செய்கிறது.

மீட்பரில் தங்கியிருத்தல் என்பதன் கருத்து நாம் இருளிலிருந்து வெளிச்சத்துக்கு வருகிறோம் என்பதாகும். அவர் "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினார்." (கொலோ 1:13) இதன் பொருள் பாவ மன்னிப்பாகும். "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது." (எபே 1:17) நாம் கடவுளோடு சமாதானம் பெற்றுள்ளோம் என்பதை இது காட்டுகிறது. "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று" (கொலோ 1:20).

இப்போது நம்மைக் கலக்கும் துன்பத்துக்கு ஒரு விளக்கத்தைப் பெற்றுள்ளோம். "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல" (ரோமர் 8:18). இதிலிருந்து நாம் கடவுளுக்கு முன் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்று தெரியும். "தேவன் தெரிந்துகொண்டவர்கள் மீது குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்" (ரோமர் 8:33) வெளிச்சம், மன்னிப்பு, கடவுளோடு சமாதானம், பாடுகளில் நிச்சயம், கடவுள் முன் நீதிமான் ஆகியவை நமக்குண்டு.

## இரட்சிக்கப்படலும் பணிபுரிதலும்

மீட்பின் பிரமாணங்களை ஏற்பது உள்ளான சமாதானத்தைக் கொடுப்பதோடு பணிபுரிந்து வாழ்வதற்கோர் அடிப்படையையும் கொடுக்கிறது. ஆவியின் கனியை வாழ்வு கொடுக்க ஆரம்பிக்கும். "அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்" (கலா 5:22-23) என்பனவன்றோ உலகுக்கு வேண்டியவை. நாம் மீட்கப்பட்டதற்கு ஒரு நோக்கம் உண்டு. கடவுளுக்குப் பணிபுரிவதே அந் நோக்கம். அவருக்குப் பணிபுரிவதால் நம்முடன் வாழும் மக்களுக்குப் பணிபுரிவோம். அவரது கிருபைக்கும் இரக்கத்துக்கும் இரட்சிப்புக்குமான பிரசன்னத்துக்கும் நாம் அதன் மூலம் சாட்சிகளாயிருப்போம். ஒப்புரவாகுதல், நன்நம்பிக்கை, வாழ்வு ஆகியவற்றின் செய்திகளைத் தாங்கியிருப்போம்.

**கர்த்தரின் கருணைதனை**
**கருத்தோடு சொல்லிடவே**
**வர்த்தியென் நாவு இணை**
**தூரத்தில் நிற்பார்க்கும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரமுத்தும் அயலவர்க்கும்
சாரத்தால் உன்தன் மொழி
கலிலேய நாட்டுக் கர்த்தன் நண்பனெனச்
சலியாது சொல்ல உழை!

பிறருக்குப் பணி செய்வதே மீட்கப்பட்ட வாழ்வின் இலட்சணம். "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" (1யோவான் 3:16). இதற்குக் காரணம் அவருடைய அன்பும், சாட்சியாயிருக்கும்படி அவர் கேட்டுக்கொண்டதாலுமாகும் (அப்.1:8). இப்படிப்பட்ட பணிகளினால் நம்மைச் சூழ உள்ள உலகோர் கடவுள் தங்களைக் குறித்தும் கரிசனையாய் இருக்கிறார் என்பதை உணரச் செய்யும். நெருக்கடி ஏற்படும்போது கூலியாளுக்கும் மேய்ப்பனுக்குமிடையே உள்ள வேறுபாடு தெரியவரும் என்று இயேசு சொன்னார். கூலியாள் "ஆடுகளுக்காக கவலைப்படான்" மீட்புத் திட்டத்தில் ஒன்றுஞ் செய்ய முடியாத நிலையிலுள்ள ஆடுகளைப்போல் நாம் உள்ளோம். மீட்பரின் சேவையில் ஆர்வத்தோடு வேலை செய்யவும், வேண்டுமாயின் பிறருக்காக நம் வாழ்வை இழக்கவும் ஆயத்தமாயுள்ள போர் வீரரைப்போல் உள்ளோம். மீட்பளிக்கும் அன்பு பற்றிய செய்தியைச் சிந்திக்கையில் நியுயோர்க் துறைமுகத்தில் உள்ள சுதந்திரச் சிலையில் வெட்டப்பட்டுள்ள எம்மா லாசருவின் கவிதை நினைவுக்கு வருவதுண்டு. அக்கவிதை பின்வருமாறு:-

**தந்திடுவீர் உம்தம் களைப்பை ஏழ்மையை**
**சுதந்தரச் சுதந்திரத்தை தேடுகின்ற திரள்களை**
**குப்பையென குவிந்தும் கரை**
**கூடாதோர் என்றவரை**
**எப்பொழுதும் வீடின்றிப் புயல்**
**காற்றினிலகப் பட்டோரை வந்திடுவீர்!**
**பொற்கதவு அருகினில் என்னிடத்தில்**
**மீட்பு மனிதன் உள்ள இடத்திலேயே**
**அவனிடம் போய்ச் சேர்க்கிறது.**
**அது அவனுடைய உள்ளத் தேவைகளை**
**உடனே பூர்த்தி செய்கிறது**
**இன்றைய மக்களுக்கு**
**இது ஒரு விடுதலைகொடுக்கும் செய்தி**
**செம்பொருள் நற்செய்தி கேள்.**
**– இயேசுவே மீட்பராம்.**
**அம்புவியில் அஞ்சல் செய் – இயேசுவே மீட்பராம்**
**இன்சொல் எங்குங் கூறுவோம்.**
**அஞ்சலென்றார்ப் பரிப்போம்.**
**முன்செல் என்று கற்பித்தார்**
**– இயேசுவே மீட்பராம்**

**இதனால் பாய்ந்திடு காயச் செந்நீர்**
**பார்த்திடு நாள்முதலாய்**
**மீட்பளித்திடுமுன் னன்பென்**
**பாட்டாயமைந்த தென்றும் எண்ணத் தோன்றும்**

## மோட்சமே வீடு

மீட்பினால் இனிக் கிடைக்கப்போகும் பேறுகளை மொத்தமாக "மோட்சம்" என்ற ஒரு சொல்லில் கூறலாம். "மோட்சத்தைப் பற்றி அதிகம் அறிந்துள்ளேன்" என்று நான் கூறேன். ஆயினும் நமது ஆறுதல் நன்னம்பிக்கைக்காக வைக்கப்பட்டுள்ளவைகளுக்காக நாம் மகிழலாம். அங்கு "மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ் சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடே கூடயிருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது"(வெளி 21:3,4).

"நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இரு கரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத் தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரை சேவித்து, அவருடைய சமுகத்தை தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும். அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய் வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்" (வெளி 22:2-5).

வேறொரு பலாபலனும் மீட்பினால் உண்டு என நான் கருதுகின்றேன். அது நம்முடைய வீட்டிற்கு செல்லும் சிலாக்கியமாகும். நாம் இங்கு பரதேசிகளும் யாத்திரிகளுமாய் உள்ளோம். இங்குள்ள பணிகள் யாவும் முடிந்ததும் இறுதியில் நாம் நம்முடைய வீடு செல்லுவோம். இவ்வுலக வாழ்க்கையிலும் 'வீட்டுக்குப் போகுதல்' என்றால் எவ்வளவு இன்பமிக்கது. நம் பழைய இருப்பிடத்துக்கும் தந்தை தாயிடமும், நண்பரிடமும் பழகின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களுக்கும் போவது உண்மையில் மகிழ்ச்சிகரமானது. இங்கு நிரந்தர வசிப்பிடம் நமக்கில்லாததால் நாம் இங்கு என்றுமே வாழப்போவதில்லை. ஆனால் மீட்பர் வாசலைத் திறந்து "வாருங்கள்" என்று சொல்லும் தினத்திலே நாம் நித்திய வீட்டுக்குச் செல்லுவோம்.

தாவீது, அந்த வீட்டுக்குச் செல்வதை வாஞ்சித்து "நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்" (சங்கீதம் 23:6) என்கிறான். நாம் பின்வருமாறு கூறத்தக்க ஒரு காலத்தை மீட்பின் மகிமை நமக்குத் தரும்.

**நிழலொத்த பயங்கள் நீங்க**
**நித்திய வேலையோய**
**பழியொத்த ஓட்ட மோய**
**அழிவதை யழியாமை போக்கும்**
**காயங்கள் ஆறும்போது**
**கண்ணின்றிக் காணும்போது**
**மாயமாம் பாரம் நீங்கி**
**மன்னவர் காட்சி யீவார்**
**பாடு எனும் துயரங்கள் ஓய**
**பாலகர் தேம்பல் ஓய**
**மலர்ந்தது ஜீவ வார்த்தை**
**மாறிடாக் காலை கண்முன்**

மீட்பின் மகிமை கண்ணாடியில் நிழலாட்டமாக அல்ல. முகமுகமாய் பார்க்கத்தக்க இடத்துக்கு நம்மைக் கொண்டு போய்ச் சேர்க்கும். (1கொரி. 13:12) போர்க்களத்திலிருந்து விருந்து பந்தலின் கீழ் நாமிருப்போம். நம்மேல் அவருடைய நேசம் என்ற கொடி பறக்கும் (உன். 2:4). ஒப்பாரி ஒழிந்துவிடும். பேரின்ப கீதம் ஒலிக்கும். அங்கு சவ அடக்க ஊர்வலங்கள் கிடையாது. பிரிவும் இராது. கண்ணீர் அங்கே துடைக்கப்படும். எவ்வித சாபமும் இராது. இராப்பகலும் அங்கு அற்றுப்போகும் (வெளி. 21).

கிறிஸ்துவின் மரணம் உயிர்த்தெழுகை ஆகியவற்றால் மீட்படைந்து இரட்சிக்கப்பட்டு நாம் வீடு செல்கிறோம். அந்தக் கடவுளின் வாசஸ்தலம் மனிதரிடையே உள்ள வீடு. தேவன்தாமே அவர்களோடு கூடயிருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவரை இதுவரை நாம் காணாவிட்டாலும் நம்மை நேசிக்கும் அவரிடம் செல்வோம். கடந்த கால கிறிஸ்தவ வீரர்கள் அங்கிருப்பார்கள். அங்கு ஒருவரோடு ஒருவருக்குள்ள அந்நியோந்நியத்தை அனுபவிக்கவும் உயிர் தியாகிகளையும் தூதுப் பணியாளர்களையும் பாடுகளையும் துன்பங்களையும் அனுபவித்த விசுவாச நபர்களைக் காண வீடு செல்வோம். நம் பிதாவின் வீட்டுக்குச் செல்வோம். கடவுளை எப்போதும் சேவிக்க அங்கு செல்வோம். என்றும் மகிழ்ந்திருக்க விடேகுவோம். நம்மில் அன்புகூர்ந்து தம்மையே நமக்காகத் தந்தவரிடம் சென்று வீடடைவோம்.

**என் வாழ்வு நீண்ட பாதை**
**செல் பயணம் ஒன்றாம்**
**காலில் கயமுண்டாக**
**களைப்பும் மேலிட**
**நான் ஏகும் நகரமோ**
**என் இடர் போக்கிடும்**
**பயணத் தொல்லை யாவும்**
**அற்பம், அங்கு சேர்ந்தால்**
**இப்போது சோர்ந்து நொந்தேன்**
**வீட்டினில் ஆறுவேன்**
**இரட்சகர் வா என்றதால்**
**உண்டாம் வரவேற்பங்கு**
**காயமும் களைத்து**
**ஆன்மாவும் சோர்கையில்**
**பயணத் தொல்லை பாவம்**
**அற்பம் அங்கு சேர்ந்தால்**
**கால்கள் தள்ளாடிச் சென்று**
**வாசலைக் காண்கையில்**
**தூதரின் கான கீதம்**
**காதினில் கேட்கையில்**
**பகல் போன்று பளிச்சிடும்**
**புயல் காண மறைவுகள்**
**பயணத் தொல்லை அன்று**
**அற்பம் அங்கு சேர்ந்தால்**

-ஹரியற் கோல்.

(முற்றும்) ❑


## சத்தியவசன புதிய கிறிஸ்மஸ் பாடல்கள் அடங்கிய ஒலித்தட்டு.

தற்பொழுது Back to the Bible புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம்....




விலை 250.00
(தபால் செலவு தனி)

மேலதிக விபரங்களுக்கு :
**Back to the Bible Book shop**
120 A, Dharmapala Mawatte
Colombo 7
Ph: 011-2695441, 011-2687040





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரீரத்தின் இசைவு



- தியோடர் எச். எப் -

மனித சரீரத்தைப் பற்றியும், ஆவியின் வரங்களின் பிரயோஜனத்தைப் பற்றியும், அவை ஒன்றையொன்று சார்ந்து செயல்படுவதைப் பற்றியும், பவுல் அப்போஸ்தலன் கூறிய கருத்து இப்பகுதியின் முக்கிய பொருளாக விளங்குகிறது. மனித சரீரத்தில் கை, கண், காது, கால் போன்ற உறுப்புகள் இருக்கின்றன. இவை வெவ்வேறான தொழில்களைச் செய்துகொண்டிருந்தாலும், அவை ஒன்றோடு ஒன்று இசைந்து, ஒற்றுமையாகவே செயற்படுகின்றன. இதைப்போலவே ஆவியின் வரங்களும் தனித்து நில்லாமல் ஒன்றையொன்று சார்ந்து செயல்படவேண்டுமென அப்போஸ்தலனாகிய பவுல் தெளிவாக உணர்த்துகின்றார்.

“சரீரம் ஒன்று. இதற்கு அவயவங்கள் பல. ஒரே சரீரத்தில் அவயவங்கள் அநேகமாக இருந்தும், சரீரம் ஒன்றாகவே இருக்கிறது. அந்தப் பிரகாரமாகவே கிறிஸ்துவும் இருக்கிறார். நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமையாயினும், சுயாதீனராயினும் எல்லோரும் ஒரே ஆவியினால் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம் தீர்க்கப்பட்டோம்” என 1கொரி. 12:12-13 ல், வாசிக்கிறோம். இந்த வாக்கியங்கள் என்றும் நிலைத்து நிற்பவை என்பதனை இருபதாம் நூற்றாண்டின் புதிய மொழிபெயர்ப்பின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. இந்தப் புதிய மொழிபெயர்ப்பில் “மனித சரீரமானது முழுமையாக இருப்பினும், அதற்கு அவயவங்கள் அநேகம் இருக்கின்றன. அந்தப்பிரகாரமே கிறிஸ்துவும் இருக்கிறார். நாம் யூதராயினும் கிரேக்கராயினும், அடிமையாயினும், சுயாதீனராயினும் ஒரே சரீரத்தை உருவாக்கும் பொருட்டு, ஒரே ஆவியினாலே ஞானஸ்நானம் பண்ணப்பட்டு ஒரே ஆவி உடையவர்களாக இருக்கிறோம். சரீரமானது ஒரு அவயவத்தை உடையதாக இராமல் அநேக அவயவங்களைக் கொண்டுள்ளது என்பதை மறுபடியும் உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் ஆவியின் வரங்கள், தேவ வரம் பெற்றவர்களுக்கு மட்டும் பிரயோஜனப்படும்படிக்கு அருளப்படாமல் முழுச்சபைக்கும் ஆசீர்வாதமாக அமையவே அருளப்பட்டன. சபை கிறிஸ்துவின் தெய்வீக சரீரமாக இருக்கிறது (The mystical Body) நீங்களும் நானும் இதில் அங்கத்தவர்களாக இருக்கிறோம். கிறிஸ்துவே சபையின் தலைவராக இருக்கிறார் (எபே 1:22,23). இந்த அதிகாரத்தில் சரீரத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ள சத்தியங்களை ஆராய்ந்து அறிவதன் மூலம் நமது ஆத்மீக வாழ்வுக்கும், ஊழியத்திற்கும், கிறிஸ்தவ சங்கங்களுக்கும் உறுதுணை காணமுடியும்.

பொதுவாக நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்யப் பின்பற்றும் முறையைவிட முற்றிலும் வித்தியாசமான முறையில் சிலர் கர்த்தருக்கு ஊழியம் செய்வதைக் காண்கிறோம். இவ்வாறு வித்தியாசமான முறையில் ஊழியம் செய்வது சாத்தியமான காரியமே. கண் பார்ப்பதையும் காது கேட்பதையும் தொழிலாக கொண்டிருக்கிற அதே நேரத்தில் கையானது மென்மையான முறையில் சித்திரம் தீட்டவும், கடினமான முறையில் பண்ணைகளிலும் தொழிற்சாலைகளிலும் வேலைசெய்யவும் உதவுகிறது. இதேபோல் கிறிஸ்துவின் சரீரத்திலும் பலவகையான வேலைகள் செய்யப்படுகின்றன. மேலும் இத்தகைய ஊழியங்களையும் பரிசுத்த ஆவியானவரே திட்டமிட்டு நடத்துகிறார் என்பதால் இந்தவிதமான ஊழியங்களையும் நாம் ஆதரிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரீரத்தில் கையானது மிகவும் முக்கியமான உறுப்பு எனக் கருதப்படுகின்ற அதேநேரத்தில் காலானது அழகற்ற ஒரு உறுப்பாகக் கருதப்பட்டு மறைக்கப்படுகின்றது. இதே கால்கள் தான் எம்மை பனியிலும் மழையிலும் வெயிலிலும் கரடுமுரடான பாதைகளிலும் நாங்கள் விரும்பிய இடத்திற்கு எம்மை சுமந்து செல்கின்றன. அதுமட்டுமல்ல நாம் அத்தியாவசியமானவை என்று கருதாத அநேக தொழில்களைக்கூட கால்களால் செய்ய முடியும். இந்தக் கால்களை மட்டும் நாம் இழந்துவிட்டால் குறைபாடுள்ளவர்களாகி விடுவோம். இதேபோல் கிறிஸ்துவின் சபையாகிய சரீரத்திலும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு குறிப்பிட்ட வேலைகளைக் கர்த்தர் திட்டமிட்டுள்ளார்.

இக்கூற்றினை ஒரு ஒலிபரப்பு தலைமைக் காரியாலயத்தில் (Broadcast Head Quarters) நடைபெறும் வேலை ஒழுங்குகளின் மூலம் நன்கு விளங்கிக் கொள்ளலாம். இதில் ஏறத்தாள இருநூறு ஊழியர் களுக்கு மேல் பணியாற்றுகிறார்கள். ஒவ்வொரு வருக்கும் சில குறிப்பிட்ட வேலைகள் பகிர்ந்தளிக் கப்பட்டிருக்கின்றன. நிர்வாக வேலையை ஒருவர் பொறுப்பேற்றிருப்பதால், எல்லாக் காரியங்களை யும் கிரமமாக இணைக்கும் வேலையை வலதுகை போன்ற இன்னொருவர் பொறுப்பேற்றிருக்கிறார். இவ்வாறே கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலும் பரிசுத்த ஆவியானவரே சகல கிரியைகளையும் நடத்துகிறார்.

கர்த்தர் ஒவ்வொருவர் மூலமும் எவ்வகை யான ஊழியங்களை நிறைவேற்ற வேண்டும் என்று திட்டமிட்டுள்ளாரோ, அந்தத் திட்டத்தின்படியே ஆவியின் வரங்களை அநுகிரகித்து செயல்படுத்து கிறார். கண்ணால் பார்க்கவும், காதால் கேட்கவும் நாம் சக்தி பெற்றிருப்பதைப்போல, கிறிஸ்துவின் சரீரத்தைச் சேர்ந்த விசுவாசிகளும் பொருத்தமான இடங்களில் அமர்த்தப்பட்டு, ஊழியத்தைச் சீராகச் செய்ய ஆவியின் வரங்கள் அருளப்பட்டுள்ளன.

பிரசங்கிக்கும் வரத்தைப் பெற்றிருப்பவர் களில் பலவகையினர் இருக்கிறார்கள். இவர்களில், பெரிய சுவிசேஷ கூட்டங்களை நடத்தக்கூடிய திறமையுள்ளவர்கள் இருக்கிறார்கள். தனிச்சபை களில் மட்டும் சுவிசேஷம் செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள். பல்வேறு பழக்கவழக்கங்கள் கொண்ட அந்நிய மொழி பேசும் மக்களிடம் சுவிசேஷத்தை பரப்பும் ஆற்றல் கொண்டவர்கள் இருக்கிறார்கள். இன்னும் இடவித்தியாசம் இன்றி, தென் அமெரிக்க ஒரு தீவாக இருந்தாலும் சரி, ஆபிரிக்காவாக இருந்தாலும் சரி, உலகின் எந்தப் பகுதியிலும் ஊழியம் செய்ய தகுதியுடையோராக இருக்கிறார்கள். வேறு சிலர் வேத சாஸ்திர அறிவோடு கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாக, படித்தவர்கள், நாகரீக மோகம் கொண்டவர்கள் மத்தியில் ஊழியம் செய்ய ஏற்றவர்களாக இருக்கி றார்கள். இவ்வாறு ஒவ்வொரு ஊழியத்திற்கும் ஏற்ற ஊழியக்காரர்களைக் கர்த்தர் உருவாக்கி பயன்படுத்தி தேர்ந்தெடுத்திருக்கிறார். நாம் இந்த உண்மையை உணர்ந்துகொண்டால் கிறிஸ்தவர் களாகிய எம்மிடையே போட்டி, பொறாமை, வாக்குவாதம், சண்டை என்பனவற்றினால் கிறிஸ்து வின் சரீரம் சிதைவது தவிர்க்கப்படும்.

## சரீரத்தினுள் பிரவேசித்தல்.

1கொரி. 12:13 ல், "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமையாயினும், சுயாதீனரா யினும் எல்லோரும் ஒரே ஆவியினால் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம் தீர்க்கப்பட்டோம்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வசனம் மூல பாஷையிலும், ஆங்கிலத்திலும் (for by one spirit are we all baptized into one body) முற்காலத்திற்கும் உரிய வினைமுற்றுடன் அமைந்திருக்கிறது. இதிலிருந்து ஞானஸ்நானம் என்பது அன்றும், இன்றும், என்றும் எக்காலத்திற்கும் ஏற்றதாக அமைகிறது என்று கொள்ளலாம். நாம் விசுவாசிகளாகி கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளே ஞானஸ்நானம் பண்ணப்பட்ட பிறகு மீண்டும் ஞானஸ்நானத்திற்காக காத்திருக்க தேவையில்லை. ஞானஸ்நானம் எக்காலத்திலும் அனுபவிக்கக்கூடியது என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஆவியினால் பிறப்பதற்கும், கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணப்படுவதற்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. நாம் ஆவியினால் பிறந்ததும், நமக்குள் கர்த்தருடைய ஜீவனைப் பெறுகிறோம். ஆவியினால் அபிஷேகம் பண்ணப் படும்போது கிறிஸ்துவின் சரீரத்தினுள் சேர்க்கப்படு கிறோம். ஆவியினால் பிறந்தவன் கர்த்தருடைய குடும்பத்தில் அங்கமாகின்றான் என்பதையும், ஆவியினால் அபிஷேகம்பண்ணப்பட்டவன் கிறிஸ்து வின் சபையாகிய சரீரத்தில் அங்கமாகின்றான் என்பதையும் நாம் உணரவேண்டும்.

கிறிஸ்தவ ஜீவியத்தில் ஆழ்ந்த அனுபவம் பெற்று முதிர்ச்சியடைந்த பின்பே, கர்த்தருடைய ஆவியானவர் அவனுள் வாசம்பண்ண வருவதாக வும், அதன் பின்பே ஆவியின் அபிஷேகத்தை அவன் பெறுகின்றான் என்றும் ஆவியின் அபிஷே கத்தை, கிறிஸ்தவ ஜீவியத்தின் இரண்டாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசீர்வாதம் என்றும் அநேகர் வர்ணிக்கிறார்கள். உண்மையில் ஆவியின் அபிஷேகம் என்பது, நாம் விசுவாசிகளானதும் ஆவியானவரால் கிறிஸ்துவின் சரீரத்தில் சேர்க்கப்படுதலாகும். இது மறுபிறப்புடன் ஒருமித்து நடைபெறும் ஒரு காரியமாக உள்ளது. நாம் ஆவியினால் மறுபிறப்படைகையில் புதிய ஜீவனைப் பெறுகிறோம். இவை இரண்டும் ஒன்றன் பின் ஒன்றாக ஒரேசமயத்தில் நடைபெறுகின்றன. இந்தச் சத்தியங்களை நாம் தெளிவாக விளங்கிக் கொண்டால் முன்பு குறிப்பிட்டதுபோல் இக்காலத்தில் சிலரிடம் பரவியுள்ள சில தவறான அபிப்பிராயங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

"ஆவியினால் அபிஷேகம்பண்ணப்படுவதை நாம் காணவோ, உணரவோ முடியாது. அந்த அபிஷேகம் நடைபெறுகையில் பலவித பாஷைகளைப் பேசும் திறமையையோ, அல்லது வேறு எந்தவிதமான அசாதாரண அனுபவத்தையோ பெறத்தான் வேண்டும் என்ற நியதியும் இல்லை. ஆனாலும் 'ஒருவன்' மறுபிறப்படைகையில், ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படுகிறான்" என்று கர்த்தரால் கூறப்பட்டிருப்பதிலிருந்து விசுவாசிக்கிறோம் (தீத்து 3:5-7).

யூதர்கள் எப்போதும் யூதர்களாகவும், புறஜாதியார் என்றும் புறஜாதியாராகவும், அடிமைகள் தொடர்ந்தும் அடிமைகளாகவும் எண்ணப்படுவதில்லை. பரிசுத்த ஆவியானவர் எல்லா விசுவாசிகளையும் பொதுவான ஐக்கியத்திற்குட்படுத்துவதினால் தங்களுடைய பிரிவினைக்கு காரணமாக இருந்த எல்லா அடையாளங்களையும் இவர்கள் துறந்துவிட்டு, எல்லோரும் ஆவியினாலே ஒற்றுமைப்படுத்துகிறார்கள். முன்பு கொண்டிருந்த குலம், கோத்திரம், ஜாதி பேதங்கள், மார்க்கப் பிரிவினைகள் எல்லாவற்றையும் ஒழித்துவிட்டு கிறிஸ்துவில் ஜீவனும், ஏக சிந்தையும் கொண்டவர்களாக மாறிவிடுகிறார்கள் (1கொரி 12:13).

கிறிஸ்துவினால் ஏற்பட்ட ஐக்கியம் இத்தனை மகத்துவமானதாக இருப்பதினால், கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளான அனைவரும் வித்தியாசம் இன்றி, ஒரே ஆவியினால் தாகம் தீர்க்கப்படுகிறார்கள். இந்த அபிஷேகத்தின் மூலமாக விசுவாசிகள் அனைவரும் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளில் பங்குபற்றக்கூடிய தகுதி பெறுகிறார்கள். இந்த அபிஷேகம் புதிய ஜீவனுக்கும் சக்திக்கும் மூலகாரணமாயுள்ளது.

ஒருவன் விசுவாசியானதும் முதலில் ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படுகின்றான். அதைத் தொடர்ந்து அவன் ஆவியினால் நிரப்பப்படும் அனுபவத்தை, அதாவது தேவஆவியின் கட்டுப்பாட்டினுள் ஜீவிக்கும் அனுபவத்தைப் பெற வேண்டும். நாம் ஆவியினால் அபிஷேகம்பண்ணப்படுகையில், கிறிஸ்துவின் சரீரத்தில் ஓரிடத்தைப் பெறுகிறோம். ஆகவே, இந்த வகையில் ஆவியின் அபிஷேகம் ஒருமுறைதான் நிகழக்கூடியதாக இருக்கிறது. ஆனால் அநேக தடவை ஆவியினால் நிரப்பப்படவேண்டும். இப்படி நிரப்பப்படும்போது ஊழியம் செய்வதற்கான வல்லமையும், சக்தியும் பெறுவோம். நாம் ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படவேண்டும் என்ற கட்டளை வேதத்தில் எந்த இடத்திலும் கூறப்படவில்லை. ஆனால் ஆவியினால் நிரப்பப்படவேண்டும் என்ற கட்டளையைப் பெற்றிருக்கிறோம். ஆகவே தொடர்ந்து பலமுறை ஆவியினால் நிரப்பப்படுவதையே நாம் ஒவ்வொரு நாளும் வாஞ்சிக்கவேண்டும்.

முதலில் ஆவியின் அனுபவத்தைப் பெறுகிறோம். பின்னர் ஆவியின் வரங்களை பெறுகிறோம். இதைத் தொடர்ந்து ஆவியினால் நிரப்பப்படுகிறோம். இவை ஒழுங்காக நிகழ்ந்த பின் மாற்றம் ஏற்பட்டு வரும் எங்கள் குணாதிசயங்களில் ஆவியின் கனிகளே அதிகம் நிறைந்து காணப்படும். இதுவே 1கொரிந்தியர் 12ம் அதிகாரத்தில் கூறப்பட்ட ஆவியின் வரங்களுக்கும் கலாத்தியர் 5ம் அதிகாரத்தில் ஆவியின் கனிகளுக்கும் உள்ள வேறுபாடாகும்.

சிலரிடம் ஆவியின் வரங்களைப்போல் தோற்றமளிக்கும் சில காரியங்களைக் கண்டு, அவை யாவும் ஆவிக்குரிய முன்னேற்றமடைந்த வாழ்க்கையின் அடையாளங்கள் என்று கருதக் கூடாது. சிலர் வெளிப்படையாக காண்பிக்கக்கூடிய தாலந்துகளைப் பெற்றிருக்கலாம். இவை பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்கு உட்பட்டவர்கள் என்பதற்கு எந்தவிதமான அத்தாட்சியுமாக அமைய மாட்டாது. இவற்றை தவறாக மதிப்பிடாதபடிக்கு நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

## பொறாமைக்கு இடமில்லை.

சரீரமானது எல்லா அவயவங்களோடும் சரிவரப் பொருத்திய முழு உடம்பாக இருக்கிறது. குறிக்கப்பட்ட இடங்களில் அங்கங்கள் அமைந்திருப்பதுபோல, கர்த்தரானவர் ஒவ்வொரு அங்கத்தவரையும் தம் சரீரத்தில், தமக்கு சித்தமான இடத்தில் அமைந்திருக்கிறார். எமக்கஃக நிர்ணயிக்கப்பட்ட இடத்தை வேறு ஒருவராலும் நிரப்ப இயலாது. கையானது ஒரு வேலையையும், கால் தன் இயல்புக்கு ஏற்ப இன்னொரு வேலையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றன. இவற்றில் ஏதாவது ஒன்று சரிவர இயங்காதுவிட்டால், அதாவது கை, கால், அல்லது கண் இப்படி ஏதாவது ஒரு அங்கம் ஊனமுற்றுப் போனால் சரீரத்தின் முழு உறுப்புமே பாதிக்கப் படும். அதுபோல் கிறிஸ்துவின் சரீரத்திலும் ஒரு அவயவம் தன் கடமையை சரிவர செய்யாவிட்டால் சரீரத்தின் முழு உறுப்புகளுமே பாதிக்கப்படும். இயேசு கிறிஸ்துவே சபையாகிய சரீரத்தின் தலையாக இருக்கிறார் என்பது 1கொரிந்தியரில் மட்டுமன்றி எபேசியர் 1:22,23லும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாமோ அந்த சரீரத்தின் குறிப்பிட்ட அங்கங்களாக இருக்கிறோம். எங்களுக்கென்று குறிப்பிட்ட இடங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் மற்ற அங்கத்தவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் இடத்தைக் குறித்து நாம் பொறாமைப்படுவதற்கு இடமில்லை.

## இச்சித்தலுக்கு இடமில்லை.

கர்த்தர் ஒவ்வொருவரையும் தமது சபையாகிய சரீரத்தில் தமக்குச் சித்தமான இடத்தில் வைத்திருக்கிறார். ஆகவே தேவனின் சித்தத்திற்கு உடன்பட்டோராய் நாம் செயலாற்றவேண்டும். மேலும் சரீரத்தில் உள்ள எந்த ஒரு உறுப்பும் முக்கியமானது என்று கருதமுடியாதபடி எல்லா உறுப்புகளும் சரிசமமாகவே இருக்கின்றன. சில உறுப்புகளாக அமைந்திருக்கும் குறிப்பிட்ட மனிதர்களால்தான் மகத்தான காரியங்கள் நடைபெற வேண்டும் என்று எண்ணப்படுவற்கு இல்லை. இதை உணர்ந்து மற்றவர்களுக்காக நிச்சயிக்கப்பட்ட இடத்தை இச்சியாது செயலாற்றினால் நாம் நிச்சயமாக கர்த்தரினால் புகழ்ச்சியடைவோம்.

## மற்றவர்களை இகழ்வதற்கு இடமில்லை.

நம்மை நாமே மற்றவர்களிடம் இருந்து வேறுபடுத்தி, எம்மை நாமே தனிப்பட்டவர்கள் என்று கருதாமல், எல்லோரையும் ஒரே சரீரத்தின் அங்கங்களாகக் கருதி, ஒருவருக்கொருவர் உதவி செய்யவேண்டும். நாம் இப்படி செய்வதினால் கர்த்தருக்கான ஊழியம் ஒழுங்காக நடைபெறும். ஆகவே இயேசு கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினராகிய நாம் ஒருவரை ஒருவர் இகழ்வதற்கு இடமில்லை என்பதை உணரவேண்டும்.

## கர்த்தர் தகுதியான கனத்தை அளிக்கிறார்.

கர்த்தர் தன் சரீரத்தின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் கிடைக்கவேண்டிய கனத்தை நிச்சயம் அருளுவார் என்று நாம் நம்பவேண்டும். அநேக விசுவாசிகள் மிகக் கடுமையாக உழைப்பார்கள். ஆனால் அந்த ஊழியத்தின் மேன்மையை சாதாரண மனிதர்கள் அங்கிகரீக்கமாட்டார்கள். ஆனால் நமது கர்த்தரோ இவற்றைக் கவனியாமல் விடுவதில்லை. தகுந்த பலனை அவர் அளிப்பார். மனிதர்களால் புகழப்பட்ட ஊழியர்களில் பலர் கர்த்தரின் முன் சாதாரணமானவர்களாக கணிக்கப் படுகிறார்கள். இவற்றிற்கு கர்த்தரால் மிகச் சிறிய பலனே அளிக்கப்படலாம்.

## அந்நியோந்நிய உதவி.

நாம் ஒரே சரீரத்தில் அவயங்களாக இருக்கிறபடியினால் ஒருவருடைய மதிப்பை ஒருவர் காத்துக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவின் சரீரம் ஐக்கியத்தில் உருவாகி இருப்பதுபோல், நாம் ஆவியிலும் ஒருமைப்பாட்டினை காத்துக்கொள்ள வேண்டும் (எபே 4:1-3) ஒருவர் பேரில் ஒருவர் அன்பாக இருக்கவேண்டும்.

நமது சரீர அவயத்தின் அங்கங்கள், மற்ற அவயங்களுக்கு உதவிசெய்கின்றன. ஒருவரது தலைமயிர் சிக்குண்டால், சிக்குகளை நீக்கி மயிரைச் சரிபண்ண கரங்கள் உதவுகின்றன. அந்த மயிர் ஏன் சிக்குப்பட்டது என்ற கேள்வியைக் கரங்கள் கேட்பதில்லை. மனமானது தலைமயிரை சீவி ஒழுங்குபடுத்துமாறு கூறியதும், அந்தக் கட்டளைக்குப் பணிந்து, நம் கரங்கள் செயற்படுகின்றன. நமது ஜீவியத்தில் கிறிஸ்தவர்களாகிய நாமும் இவ்வண்ணமாக ஒருவருக்கொருவர் உதவி செய்கிறோமா? அல்லது பிறருடைய தவறுகளைத் திருத்தி அவர்களின் குற்றங்களை மிகைப்படுத்தி பலரும் அறியும்வண்ணம் பகிரங்கப்படுத்துபவர்களாக இருக்கிறோமா?

என் உச்சந்தலையில் வழுக்கைவிழ ஆரம்பித்திருக்கிறது. நான் வாலிபன் அல்ல. எனது வயது அதிகரிக்கும்போது தோற்றத்தில் பல மாறுதல்கள் ஏற்படும் என்ற தத்துவத்தையும் அறிவேன். இருந்தும், நான் மயிர் கத்தரிக்கச் செல்லும்போது மயிர் கத்தரிப்போனிடம் குறிப்பிட்ட இடத்தைச் சுற்றி அதிக மயிரை விட்டுவைக்குமாறு கூறுவேன். அதன்பின் மயிர் கத்தரிப்போன் நான் குறிப்பிட்டப்படி அதிக மயிரை விட்டுவைத்திருக்கின்றானா என்பதை அறிய கையானது வழுக்கை விழுந்திருக்கும் இடத்திற்கு மேலாக உள்ள மயிர்களைத் தடவிப் பார்க்கும். இது மிகவும் பொருத்தமானதும் எல்லோரும் அறிந்திருக்கக்கூடியதுமான உதாரணமாகும். இந்த அவயவங்கள் ஒன்றுக்கு ஒன்று துணையாக இயங்குவதைப்போல, கிறிஸ்தவர்களாகிய நாமும் ஒருவருக்கொருவர் ஆற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய பொறுப்புக்களை உணர்ந்துகொள்ள வேண்டும்.

குறிப்பிடப்பட்ட ஒரு சிலரிடம் அன்பு செலுத்த முடியாது என்று சிலர் கூறலாம். அவர்கள் கூறுவதும் உண்மையாகவே இருக்கிறது. ஆனால் உலகப்பிரகாரமாக அன்பு செலுத்தும்படியாக நாம் கேட்கப்படாமல், கிறிஸ்துவின் அன்பின் ஊற்று எம் ஊடாகப் பாய்ந்து ஓடும்படியே கேட்கப்படுகிறோம்.

மற்ற கிறிஸ்தவர்களுடன் ஒத்துப்போகக் கூடாத நிலை நமக்கு ஏற்படின் கிறிஸ்துவின் சுபாவம் எம்மில் இருக்கிறதா என்ற கேள்வியை நம்மை நாமே கேட்டுக்கொள்வது நல்லது. கிறிஸ்துவின் சுபாவமா எம்மை இப்படி மற்றவர் களிடம் இணைந்து போகாமலிருக்கச் செய்கிறது? இல்லை நம்மிடமுள்ள பழைய சுபாவமே இதற்குக் காரணம் என்பதை நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். நாம் மரித்துபோனதாக கருதுகிற பழைய சுபாவத் திற்கு ஏன் ஆதரவு காட்டி வளர்க்கவேண்டும் (ரோமர் 6:1-12).

சரீரத்தின் அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாக இருக்கவேண்டும் என்று கர்த்தர் கூறியிருக்கிறார். மனித சரீரத்தில் ஒரு அவயவம் வேதனைப்பட்டால் எல்லா அவயவங் களும் வேதனைப்படும். ஒரு அவயவம் மகிமைப் பட்டாலோ சகல அவயவங்களும் சேர்ந்து சந்தோ ஷப்படும். இதைப்போல் கிறிஸ்துவின் சரீரத்திலும் ஒருவர் மகிமைப்பட்டால் நாம் சந்தோஷப்படுகி றோமா? அல்லது பொறாமைப்படுகிறோமா?

நமது கையொன்று கதவிடுக்கில் அகப்பட்டு நசுங்குண்டால், மற்ற கரமோ அல்லது சரீரத்தின் ஏனைய அவயவங்களோ அதன் பேரில் குற்றம் சுமத்தாமல் அனுதாபமும் அன்பும் காட்டி அரவணைக்கின்றன. இதேபோல் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினர்களில் ஒருவர் குற்றம் புரிந்தால் நாமும் அவர்கள் மேல் அன்புகாட்டி அரவணைக்கவேண்டும். நாம் படித்தவற்றை இது போன்ற அனுபவங்கள் ஊடாக ஆராய்தல் அவசியமாகிறது.


சரீரத்தின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் ஆவியினாலே தாகம் தீர்க்கப்படுகிறார்கள் என்று அறிந்தோம். மேலும் பரிசுத்தஆவியினாலே நமக்கு அருளப்பட்ட தேவ அன்பானது நமது இதயங்களில் ஊற்றப்பட்டிருக்கின்றபடியினால் அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது என்று ரோமர் 5:5ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வித தேவ அன்பானது பூரணமாக இருந்தால் கர்த்தருடைய பிள்ளைகளா கிய எம்மிடையே அடிக்கடி ஏற்படுகின்ற பேதங்க ளுக்கும் பிரச்சினைகளுக்கும் இடம் இருக்காது.

## பரிசுத்த ஆவியினால் ஏற்படும் ஐக்கியத்திற்கும் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சங்கங்களுக்கும் உள்ள வேறுபாடுகள்

இக்காலத்தில் சன்மார்க்கம் எனக் கூறி, கடவுள் பக்தியுள்ள மக்களிடையே ஒரு பொது வான சங்கத்தை ஏற்படுத்தச் சிலர் முயற்சி செய்து வருகின்றனர். விசுவாசிகளும், அவிசுவாசிகளும் சேர்ந்து இச்சங்கத்தை ஸ்தாபிக்கின்றனர். உபத்திரவ காலத்தில் இவ்வாறு ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்களுக்கு அந்திக் கிறிஸ்துவும் கள்ளத்தீர்க்க தரிசியும் தலைமைவகிப்பார்கள் என்று வேதம் கூறுகிறது.

அநேக சந்தர்ப்பங்களில் "கிறிஸ்து என் நிலையில் இருந்தால் என்ன செய்திருப்பார்" என்று கேட்போர் பலர் இருக்கிறார்கள். ஆனால் இதிலும் இவ்வுலக விசுவாசிகளாகிய நாம் "சரீரத்தின் தலைவர் யார்?" என்று ஆழமாகச் சிந்தனை செய்வது அவசியமாகிறது. அப்போது அவரே சிருஷ்டி கர்த்தாவாகவும், இரட்சகராகவும் இருக்கி றார் என்பது புலனாகும்.

1கொரிந்தியர் 12:27ம் வசனத்தின் மூலம், நீங்களே கிறிஸ்துவின் சரீரமாகவும், தனித்தனியே அவயவங்களாகவும் இருக்கிறீர்கள். இங்கு வேதத் தில் கூறப்பட்ட சரீரமானது, முன்பு குறிப்பிட்டபடி மனிதனால் ஸ்தாபிக்கப்பட்ட சன்மார்க்க சங்கங் களைப் போன்றதல்ல. உலகப் பிரகாரமான இந்தச் சங்கங்களைப் புறக்கணித்துவிட்டு விசுவாசிகள் யாவரும் பரிசுத்த ஆவியானவரால் இணைக்கப்படு தலே உண்மையான ஐக்கியமாகும். சமாதானத் தின் மூலமே நாம் ஆவியானவரின் ஐக்கியத்தை நாடவேண்டும் எனக் கர்த்தர் உரைக்கிறார். நாம் ஆவியின் ஐக்கியத்தின் மூலம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட மாத்திரத்தே மற்ற விசுவாசி களுடன் ஐக்கியப்பட்டு விடுகிறோம். ❑






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சிகை அடிச்சுவடுகள்...

தொடர்பு சாதனங்கள் மூலம் தேவனுடைய வார்த்தையை மக்களுக்கு அறிவித்து வரும் சத்தியவசனம் ஊழியத்தின் ஒரு முக்கிய அம்சமான இந்த சஞ்சிகை ஊழியமானது திருமதி மொடோஸ் அவர்கள் சத்தியவசன ஊழியத்தில் நிர்வாகியாக பணியாற்றிய காலத்தில் சத்தியவசனத்தின் முதலாவது கன்னி இதழான சஞ்சிகை வெளியானது.




(1970களில்)

**"பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, தேவனுடைய ஆவியினாலே ஆகும்"** (சகரியா 4:6) என்ற வார்த்தையின்படி மனித பெலத்தினால் அல்ல, தேவ ஆவியானவரின் பெலத்தினால் சத்தியவசனம் சஞ்சிகை பணியானது தனது 40 வருட நிறைவினை பூர்த்திசெய்கின்றது.



(1972-87வரை)

ஆரம்ப நாட்களில் தலைமை ஸ்தாபனத்தில் வெளியான ஆங்கில புத்தகங்கள், தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகின. 1970ம் ஆண்டு காலப்பகுதியிலேயே எமது மக்களின் தேவைகளுக்கு ஏற்றவிதத்தில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் எமது சொந்தப் படைப்புக்களை வெளியாக்க வேண்டுமென உணரவே அதற்கான அனுமதி தலைமை ஸ்தாபனத்திலிருந்து அளிக்கப்பட்டது. அதன் விளைவாக 1972ம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ், சிங்கள சஞ்சிகை மற்றும் தியான நூல்கள் வெளிவர ஆரம்பித்தன. 1997 ம் ஆண்டே எமது முதல் ஆங்கில சஞ்சிகை எமது காரியாலயத்திலிருந்து வெளிவந்தது.



(1987-2004வரை)

சத்தியவசனம் சஞ்சிகை ஆரம்பம் முதல் 1987ம் ஆண்டுவரை திரு. சாம் போல் அவர்கள் சஞ்சிகையின் ஆசிரியராகப் பணியாற்றி, சஞ்சிகையின் வளர்ச்சியிலே அயராது உழைத்தார். 1988ம் ஆண்டுமுதல் திரு. எம். எஸ். வசந்தகுமார் அவர்கள் இச் சஞ்சிகையின் தொகுப்பாசிரியராகப் பணியாற்றினார். அவரைத் தொடர்ந்து 2005ம் ஆண்டுமுதல் திரு.நீரியஸ் பெர்னான்டோ அவர்கள் இப்பணியை முன்னெடுத்துச் சென்றார். 2010 ம் ஆண்டு அவர் விலகிச்சென்றதையடுத்து உதவி ஆசிரியராக இருந்த திரு. வஷ்னீ ஏனாஸ்ட் இச்சஞ்சிகையின் தொகுப்பாசிரியராக பணியாற்றி வருகின்றார். இப்பணியிலே தங்களது நேரத்தையும் தாலந்துகளையும் அர்ப்பணித்து பணியாற்றிய, பணியாற்றி வருகின்ற ஒவ்வொரு ஊழியர்களையும் நாம் நன்றியோடு நினைவு கூருவதோடு தேவனைத் துதிக்கின்றோம்.



(2005-2010வரை)

இவ்வெளியீடுகள் குறிப்பாக சிறையிலுள்ளவர்களுக்கும் அகதிகளுக்கும் தொழில் நிமித்தம் வெளிநாடுகளில் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் வசிப்பவர்களுக்கும் நாட்டில் ஏற்பட்ட வன்செயல் காரணமாய் அகதிகளாக புலம்பெயர்ந்து சென்றுள்ள பல மக்களுக்கும் பெரும் ஆசீர்வாதமாய் இருந்து வருகின்றது. அத்துடன் ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா போன்ற தேசங்களில் வாழும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களுக்கு இந்தப் பணி பெரும் ஆசீர்வாதமாகத் திகழுவதோடு உலகலாவிய ரீதியில் அநேகர் இதன் வாசகர்களாக இணைந்துகொண்டமையிட்டு பெருமிதமடைகின்றார்கள். தொடர்ந்துவரும் நாட்களிலும் இந்த சஞ்சிகை ஊழியமானது வளர்ந்து பெருகவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் இந்த ஊழியத்தின் ஊடாக மகிமைப்படவும் உங்கள் ஜெபங்களில் இப்பணியைத் தாங்குங்கள்.



(2010 முதல்)

மக்களை தேவனோடு ஒரு உயிரோட்டமுள்ள உறவுக்குள் வழிநடத்தும் பணியிலே ஈடுபட்டுவரும் இந்த சஞ்சிகை ஊழியமானது, இலங்கையில் மட்டுமன்றி, பிறநாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் மிகுந்த ஆசீர்வாதமாக இருந்து வருவதையிட்டு கர்த்தரை நாம் நன்றியோடு துதிக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சத்தியவசனம் சஞ்சிகை மற்றும் தியானநூல் எழுத்தாளரும் சிறந்த புத்தக ஆசிரியருமான சகோதரி சாந்திபொன்னு அவர்களின் செய்தி:

*நாலும் கற்றுவிட்டால் நாலுபேர் மதித்திடலாம் – வாழ்வு*
*நாற்பதை எட்டும்வரை நற்கந்தம் வீசிடுமோ!*
*நாற்பதுவரை கண்ட சுக துக்கம் நாளாக மாறிவிடும் – வாழ்வில்*
*நாட்டிவிட்ட அடித்தளமோ அசையாது நிலைத்திடும்.*
*வாழ்க! சஞ்சிகை உன்னை வாழ்க என்று வாழ்த்துகிறேன் – நீ*
*ஓடவேண்டிய தூரம் வெகுதூரம், உறுதிகொண்டு உயர்ந்திடு!*

நாற்பது வருடங்களைப் பூர்த்தியாக்கி இன்னுமொரு திருப்புமுனையில் நிற்கும் "சத்தியவசனம்" சஞ்சிகைக்கு என் மனப்பூர்வமான வாழ்த்துக்கள். இதன் ஆரம்ப காலத்திலிருந்து இந்தச் சஞ்சிகை என் வாழ்வில் ஏற்படுத்திய திருப்பங்கள் பல. அதில் முக்கியமானதொன்றைத் திரும்பிப் பார்க்கிறேன். அன்று என் வாலிப பருவத்தில் இதன் ஆக்கங்கள் என் வாழ்வோடு பின்னிப்பிணைந்து இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால், அதிலும் மேலாக, இந்த சஞ்சிகையில் எனது ஆக்கம் ஒன்று எனது பெயருடன் வெளிவரவேண்டுமே என்று 'ஆசை'ப்பட்டதை நினைக்கும்போது எனக்கு இப்போதும் வெட்கமாகவே இருக்கிறது. ஏனெனில், எனக்கு எழுதுவது என்பது என்னவென்றே தெரியாது. ஆனாலும், என் அந்தப் பருவநிலையின் தாக்கங்கள் வாழ்வில் பல காயங்களை ஏற்படுத்தியிருந்ததால், ஆண்டவரை என் மேய்ப்பனைப்போலவும், காயப்பட்டு கால்முறிந்துவிட்டதால் ஆண்டவர் என்னைத் தன் கரத்தில் அணைத்துச் சுமக்கும் ஆட்டுக்குட்டியாய் என்னையும் நான் நினைத்துக் கலங்குவதுண்டு. இதனையே மனதில்கொண்டு ஏதோ எழுதி அனுப்பினேன். அந்நாட்களில் தமிழ்ப்பணிப் பொறுப்பாளராக பணியாற்றிய சகோதரி மேரி அவர்கள் அந்தச் சிறிய கட்டுரையை வெட்டிக் கொத்தி அழகாக்கி சஞ்சிகையில் வெளிவர உதவினார்கள். அந்த சஞ்சிகை என் கைகளில் கிடைத்த நாளை நான் மறக்கமுடியாது.

மனித வாழ்வில் நாற்பது வருடங்களில் பல அனுபவங்களை அவன் பெற்றுக்கொள்ளலாம்; பல சாதனைகளைச் சாதிக்கலாம். ஆனால், நாற்பது ஆண்டுகளைக் கடக்கும்போது, அவனுக்குள்ளேயே உள ரீதியாக ஒரு பொறுப்புமிக்க மாறுதல் தானாகவே ஏற்படுகிறது என்பதுதான் உண்மை. 'நாற்பது', ஒரு முதிர்ச்சியின் ஆரம்பம் என்று சொன்னாலும் மிகையாகாது. 'போதும் கர்த்தாவே' என்று சூரைச்செடிக்குள் தன்னை மறைத்துக் கொண்டு தூங்கிக்கொண்டிருந்த எலியா தீர்க்கன், கர்த்தருடைய தூதன் கொடுத்த அடையையும் தண்ணீரையும் உண்டு குடித்துவிட்டுத் திரும்பவும் படுத்துக்கொண்டான். ஆனால் தூதனோ, 'எழுந்திரு, நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம்' என்றான். எலியா அந்தப் போஜனத்தின் பலத்தினால் நாற்பது நாட்கள் இரவுபகலாக, ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதம்மட்டும் நடந்தேபோனான். 'ஓரேப்' என்றால் வனாந்தரம் என அர்த்தம். அங்கே அவன் பெற்ற அனுபவம், கேட்ட தேவசத்தம் ராஜாக்களையும் தீர்க்கதரிசியையும் அபிஷேகம்பண்ணுமளவுக்கு எலியாவைப் பலப்படுத்தி அனுப்பியது.

சத்தியவசனம் சஞ்சிகை தனது நாற்பது வருடங்களைப் பூர்த்திசெய்துவிட்டது என்று நாம் மகிழ்ந்தாலும், அது இதுவரையிலும் பல இடுக்கங்களைச் சந்திக்காமல் விட்டதில்லை என்பதையும் நாம் நினைவுகூரவேண்டும். 1983ம் ஆண்டு நாட்டின் பிரச்சனைகளில் இதன் ஆயுள் முடிந்துவிடுமோ என்ற அச்சம் எழுந்தது. ஆனால், தேவபெலத்தால் 40 ஆண்டுகள் ஓடிவிட்ட இந்த சஞ்சிகை, இன்னமும் ஓடவேண்டிய பிரயாணம் வெகுதூரம். இதுவரை பெற்ற பெலத்தைக்கொண்டு, இக் கடைசிக் காலங்களில் வனாந்தரமும் பாழுமாகிவிட்ட பல இடங்களுக்குள் ஊடுருவிச் சென்று, கர்த்தருக்கென்று பல ராஜாக்களையும் தீர்க்கர்களையும் உருவாக்குகின்ற பெரிய பொறுப்பு இந்த சஞ்சிகைக்கு உண்டு என்பதே என் வாழ்த்துச் செய்தியாகும். கிறிஸ்துவின் வருகைவரையிலும் சத்தியத்தில் நிலைத்திருந்து கிறிஸ்துவுக்காக கர்ப்ப வேதனையுடன் பலரை உருவாக்கவேண்டுமென்று சஞ்சிகையை நான் மனதார வாழ்த்துகிறேன். தேவநாமம் தொடர்ந்தும் மகிமைப்படுவதாக.

---

போட்டி

### கண்டுபிடிப்போம்..... வேதாகமத்தில் 40

வேதாகமத்தில் 40 நாள்,
40 வருஷம் என பல சம்பவங்கள்
40ஐ வெளிச்சமிட்டு காட்டுகின்றது.
அதுகுறித்த உங்கள் துணுக்குகளை,
கவிதைகளை, கட்டுரைகளை
உங்கள் பெயர், விலாசத்துடன்
எமக்கு எழுதியனுப்ப தவறாதீர்கள்!


40 வருடங்களைப் பூர்த்திசெய்துள்ள
சத்தியவசனம் சஞ்சிகைக்கு
உங்கள் ஆக்கங்களை விரைவாக எழுதி
அனுப்ப மறவாதீர்கள்....!

வயதுவித்தியாசமின்றி இப்போட்டியில்
அனைவரும் பங்குபற்றலாம்....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியவசனம் சஞ்சிகைக்கு
# வாழ்த்துப் பா



சத்தியவசனத்தை கேட்டதினால்

**40**

விசுவாசிக்க தொடங்கினேன் - இயேசுவே
சத்தியமும் வார்த்தையும் என்பதை
அனுபவிக்கத் தொடங்கினேன்.

**வ**

சத்தியவசனத்தை வாசித்ததினால்
அறிவுக்கண்கள் திறந்தன - இயேசுவே
நித்திய தேவனும் ராஜாதிராஜனும்

**ரு**

என்பதை அறிந்தேன்.

சத்தியவசனத்தை பெற்றதினால்
பாவம் இன்னதென்பதை அறிந்தேன் - இயேசுவே

**ட**

பாவியின் மீட்பரும் இரட்சகரும்
என்பதை உணர்ந்தேன்.

**ங்**

சத்தியவசனத்தை ருசித்ததினால்
என்னில் ஜீவ ஒளிவந்தது - இயேசுவே
நித்திய ஜீவனைத் தந்தார்

**க**

சத்திய வாழ்வும் வந்தது.

சத்தியவசனத்தை கேளுங்கள்
அதன்படி வாழும்போதினில் - இயேசுவின்

**ள்**

அன்பும் பரிசுத்தமும் சாந்தமும்
சமாதான மகிழ்ச்சியும் பெருகிடுமே.

ரி.எல்.தாசன்.


***Back to the Bible*** ஊழியத்தின்
இலங்கை சத்தியவசனம் சார்பில்,
சஞ்சிகை வாசகர்கள், வானொலி நேயர்கள்,
விசுவாச தோழர்கள், ஜெப தோழர்கள்,
தியானநூல் வாசகர்கள் மற்றும்
கிறிஸ்துவுக்குள் அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த



**இனிய கிறிஸ்மஸ் & புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மதுரை சத்தியவசனம் பொறுப்பாளரான

## திரு. பழனிவேல் அவர்களின் வாழ்த்துரை

சத்தியவசனம் சஞ்சிகை தனது 40 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் மதுரை சத்தியவசன ஊழியத்திலிருந்து வாழ்த்துதலை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகி றோம். தேவன் தம்முடைய பிள்ளைகளுக்குத் தந்த தரிசனத்தின்படி இச்சஞ்சிகை ஊழியம் ஆரம்பிக்கப்பட்டபடியால், இவ்வூழியத்தின் வாயிலாக மகத்தான வெற்றியையும் இவ்விதழை வாசிக்கின்ற மக்கள் மத்தியில் எழுச்சியையும் காணக்கூடியதாயிருக்கிறது. கடந்த 40 ஆண்டுகளாக இப்பத்திரிக்கையின் வளர்ச்சிக்கு பாடுப்பட்டவர்களையும், அந்தந்த கால கட்டங்களில் பணியாற்றிய இவ்விதழின் பொறுப்பு ஆசிரியர்களையும் ஆவிக்குரிய சத்தியங்களையும் கட்டுரைகளையும் எழுதிய தேவ ஊழியர்களையும் பாராட்ட கடமைப்பட்டுள்ளோம். தங்கள் படைப்புகளையும் கவிதைகளையும் சிறுகதைகளையும் இவ்விதழுக்கு அளித்து தங்கள் தாலந்துகளை கர்த்தருக்கென்று உபயோகித்த தேவ பிள்ளைகளை கர்த்தர் அபரிதமாக ஆசீர்வதிப்பாராக!

40 ஆண்டுகளுக்கு முன்பாக திருமதி மொடோஸ் அம்மையார் அவர்கள் இவ்விதழுக்கு ஜெபத்தோடு வித்திட்டு ஆரம்பத்திலேயே சரியான அஸ்திபாரமிட்டு ஒரு தரமான உயர்தர ஆவிக்குரிய பத்திரிகையாக வளர்வதற்கு வழிகாட்டிய அவர்களது மகத்தான சேவையையும் பிரயாசத்தையும் நாம் இவ்வேளையில் நினைவுகூருகிறோம். இந்தியாவில் வெளிவந்துகொண்டிருக்கும் சத்தியவசனம் இதழுக்கு இலங்கை சத்தியவசனம் சஞ்சிகை ஒரு வழிகாட்டியாய் அமைந்திருக்கிறது என்றால் மிகையாகாது. சத்தியவசன சஞ்சிகையின் பயணம் இயேசுகிறிஸ்துவின் வருகை வரை தடையின்றி தொடரவும் இவ்விதழின் வாயிலாக இன்னும் அநேகர் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபத்தோடு வாழ்த்துகிறோம்.

**'தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர். நீர் செய்ய நினைத்தது தடைபடாது' (யோபு 42:2)**



## சத்தியவசனம் பணிகளின் முன்னாள் தமிழ்ப்பணி பொறுப்பாளரான

## திரு. நீரியஸ் பெர்னான்டோ அவர்களின் வாழ்த்துரை

சத்தியவசன சஞ்சிகை தனது 40வது ஆண்டு நிறைவைக் காணும் இச்சந்தர்ப்பத்தில் இதற்கு வாழ்த்துரை தெரிவிக்கக் கிடைத்த வாய்ப்பை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.

சத்தியவசன ஒலிப்பதிவு கலையகத்திலே உள்ள ஆயிரக்கணக்கான பாடல்களுக்குள், எனக்குப் பிடித்த பாடல்களில்: "போராடும் உலகினிலே பொழுது விடியும் நேரத்திலே காதில் கேட்கும் செய்தி என்றும் கொடியது, நீ சோராதே என் மனமே சற்று தூர தொலைவினிலே காத்திருக்கும் வானம் பூமி புதியது..." என்ற அருமையான வரிகளைக் கொண்ட ஒரு பாடல் உண்டு. உண்மையாகவே நாம் வாழும் இந்த உலகில், தினமும் பத்திரிகையிலும் தொலைக் காட்சியிலும் நாம் பார்க்கும் செய்திகள் மிகக் கொடிய தாகவே உள்ளது.

இப்படிப்பட்ட செய்திகளைக் கேள்விப்படும் போது மனித உள்ளம் சோர்ந்து, நம்பிக்கை இழந்து போவது இயற்கையே. இந்தவிதமான மனதைக் கலங் கடிக்கும் கொடிய செய்திகளின் மத்தியில், சத்தியவசன சஞ்சிகையானது கடந்த 40 வருடங்களாக திரு வசனத்தின் வழுவாத சத்தியங்களிலிருந்து மக்களுக்கு நல்ல செய்தியைச் சுமந்து வரும் ஆண்டவரின் ஊடக மாக விளங்கி வந்திருக்கிறது. அந்த வகையில் கடந்த காலங்களில் இந்த சஞ்சிகை தயாரிப்புப் பணியில் பங்களிப்பு செய்ய, தகுதியற்ற எனக்கும் கிடைத்த வாய்ப்பை எண்ணி கர்த்தரை நன்றியோடு துதிக்கின்றேன்.

40 வருடங்களுக்கு முன் ஒரு தரிசனத்தோடு இந்த சஞ்சிகையை ஆரம்பித்துவைத்த திருமதி மெடோஸ் அவர்கள் இன்று நம்மை விட்டு மறைந்து விட்டாலும், இன்றுவரை இந்த சஞ்சிகையின் தரிசனத்தை நிறைவேற்றுவதில் கர்த்தர் உண்மையுள்ளவராக இருந்து வந்திருக்கிறார். "புல் உலர்ந்து பூ உதிரும்; நமது தேவனுடைய (சத்திய) வசனமோ என்றென்றைக்கும் நிற்கும்" (ஏசாயா 40:8).

பலவிதமான சவால்களின் மத்தியில் மிகுந்த அர்ப்பணிப்புடன் இதைத் தயாரிக்கும் ஊழியர்களையும் வாசகர்களாகிய உங்களையும் கர்த்தர்தாமே மென்மேலும் ஆசீர்வதிப்பாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*கேள்வி :* **நாங்கள் கிறிஸ்மஸ் (நத்தார்) பண்டிகையைக் கொண்டாடலாமா?**

*பதில் :* டிசம்பர் 25 அன்று, நத்தார் தினம் என்று பல கிறிஸ்தவர்கள் கொண்டாடுகிறார்கள். அது சரியான திகதி தானா என ஏராளம் விவாதமுண்டு. ஆனால் அது காரியமல்ல. முதல் நத்தார் தினமன்று திரித்துவத்தின் இரண்டாம் நபர் மனுவுரு வெடுத்து உலகில் அவதரித்தார் என்பது மறுக்க முடியாத சத்தியம். அதனை குறிப்பிட்டதொரு நாளில் சிறப்பாய் நினைவுகூருவதில் தவறில்லை. "நாட்களை விசேஷித்துக் கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளுகிறான்; நாட்களை விசேஷித்துக் கொள்ளாதவனும் கர்த்த ருக்கென்று விசேஷித்துக் கொள்ளாதிருக்கிறான்" (ரோமர் 14:6) எனவே, நத்தார் பண்டிகையைக் கொண்டாடவோ, கொண்டாடாது இருக்கவோ எவருக்கும் முழுச் சுதந்திரமுண்டு. இவ்விதக் காரியங்களில் நாம் இனி ஒருவரையும் நியாயந் தீர்க்காமல் இருப்போமாக (ரோம. 14:13).

நத்தார் பண்டிகையை எப்படிக் கொண்டாடுகி றோம் என்பதே எமக்கு முக்கியமானது. கிறிஸ்தவ நாடுகள் பலவற்றில் கிறிஸ்துமஸ் என்றாலே குடியும், வெறியும், களியாட்டும்தான். பெத்லகேம் பாலகனுக்கு இது எவ்வளவு அவமரியாதை! புத்தாடை உடுப்பதிலும், பல்சுவை உணவு அருந்துவதிலும் தவறேதுமில்லை; ஆனால் "தேவ இராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல. அது பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷம்" என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது (ரோமர் 14:17).

முதல் நத்தார் தினமன்று மேய்ப்பர்கள் "பிள்ளையைக் குறித்த சங்கதிகளை எங்கும் பிரசித்தம் பண்ணினார்கள்!" (லூக்கா 2:17). நாமும் அக்காலத்தைத் தீவிர நற்செய்திப் பணிக்குச் செலவிடுவோம்! பாட்டுப் பாடி சேரி சந்திகளுக்கும், கிராமங்களுக்கும், தெரு மூலைகளுக்கும் சென்று கிறிஸ்தவரல்லாதோருக்குக் கிறிஸ்துவின் செய்தி யைப் பறைசாற்றுங்கள்!

மட்டுமல்ல, அந்த மேய்ப்பர்கள் தேவனைப் "புகழ்ந்தும் துதித்தும்" திரும்பினார்கள் (லூக்.2:20). "தேவனருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக" அவரை துதித்து உளமார வாழ்த்தும் நாட்களாய் நத்தார் காலம் அமையட்டும் (2கொரி.9:15). கிறிஸ்துவின் முதல் வருகையைச் சிறப்பாய் நினைவுகூருவதோடு அவருடைய இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படும்படி தீவிரிப்போம். "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமை உண்டாவதாக" என ஒவ்வொரு கோத்திரமும், மொழியினரும், மக்கள் கூட்டமும் முழங்கட்டும்! (வெளி. 7:9; லூக்கா 2:14).

*கேள்வி :* **பெருங்கூட்ட சபைகளைப் பற்றி...?**

*பதில் :* சபைகளில் அங்கத்தினரின் எண்ணிக்கை அதிகரிக்குமாயின் ஒரு சில சபையினர் அதனை ஒரு மேன்மையாகக் கருதுகின்றனர். எந்தச் சபை பெரிது? யாருக்கு கீழ் யார்? எனும் எலிப்பந்தயம் குறிப்பாக பட்டணங்களிலும் நகர்புறங்களிலும் பெருவாரியாய் நடக்கிறது. எல்லாச் சபைகளும் பெரிதாகவேண்டுமென்பது தேவ சித்தம் என்பது மறுக்கமுடியாது. ஆனால் திரளான சபையாரை மேய்ப்பதற்குச் செலுத்தவேண்டிய கிரயத்தையும் "சீடர்களின் தொகை பெருகும்போது" அத்துடன் வரும் பிரச்சினைகளையும் சபை தலைமையானது மனதிற்கொள்ள வேண்டும் (அப். 6:1).

நாம் எங்கும் சிதறிச் செல்லவேண்டுமென் பதே தேவனது பொதுவான சித்தமாகும். அதாவது, வெள்ளப் பெருக்கையடுத்து கடவுள் நோவாவை யும் அவன் புதல்வரையும் பார்த்து, "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்" என்றார் (ஆதி 9:1). மக்களோ தாங்கள் சிதறுண்டு போகாதபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபேல் கோபுரத் திட்டத்தை மேற்கொண்டார்கள். தங்களது பெயரை நிலைநாட்ட விரும்பியதால் அவர்கள் கடவுளின் திட்டத்திற்கு முரண்பாடாய்ச் செயல்பட்டனர் (ஆதி.11:4). கடவுள் எவ்விதம் அவர்களது திட்டத்தைத் தாறுமாறாக்கி எங்கும் அவர்களைச் சிதறடித்தாரென்பதை நாமறிவோம். எருசலேமிலிருந்த ஆதி திருச்சபையும் இதுபோன்ற ஒரு தவறையே செய்தது. எருசலேமில் தொடங்கி உலகின் கடைசி எல்லைவரை அவர்கள் சாட்சி களாய் வெளி கிளம்பிச் செல்ல வேண்டுமென்பதே திருச்சபையின் தலைவரான கிறிஸ்து தமது சீஷர் களுக்குக் கொடுத்த அறிவுரையாகும் (அப். 1:8). அவர்களோ தினசரி கூடுகை, தினசரி திருவிருந்து போன்ற ஆன்மீக ஆசீர்வாதங்களில் திளைத்து எருசலேமிலேயே தங்கிவிட்டனர் (அப். 2:46,47). கொடுமையான உபத்திரவத்தை கடவுள் அவர்கள் மீது அனுமதித்தார்; ஏனெனில் சுவிசேஷத்தைக் கொண்டுசெல்ல அது ஒன்றுதான் வழியாயிருந்தது! (அப் 8:1).

பொதுவாக சபைகளில் ஐக்கியம் இல்லை. சபையாரின் எண்ணிக்கை பெருவாரியாகும்போது ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டு ஒருவருக்கொரு வர் ஊழியம் செய்வது சாத்தியமற்றதாகவே போய் விடுகிறது. திருச்சபை ஆராதனை தேவனுக்குமுன் உகந்ததாக இருந்தாலும் ஒருவரோடொருவர் அந்நியோந்நியப்பட்டு ஒருவரையொருவர் பக்தி விருத்தியடையச் செய்வது இல்லையே (எபே. 5:18-20) ஏன்? ஒருவருக்கொருவர் இருக்கவேண்டிய தொடர்புகள் ஈரமில்லாது போகின்றதினால் சபை வளர்ச்சியடையாமற் போகின்றன (எபே. 4:16).

தங்கள் திறனுக்கு மிஞ்சி வளர்ந்துவிடும் ஊழியத்தினால் சில ஊழியர்கள் சோர்வடைந்து விடுவதுண்டு. கடவுள் தங்களுக்குத் தந்துள்ள "விசுவாச அளவை" மிஞ்சி அவர் நியமித்துள்ள "வரம்பை" தங்களுக்கே தெரியாது கடந்துவிடுகின் றனர் (ரோம. 12:3; 2கொரி.10:13). சில ஊழியர்க ளுக்கு திரள்கூட்ட சபையினரை மேய்க்கத்தக்க அசாதாரண கிருபாவரமுண்டு என்பது உண்மை தான்; ஆனால் அவர்களுக்குப்பின் அடுத்து திருச் சபையைப் பொறுப்பேற்பவர்களுக்குப் பொதுவாக அந்தளவு அபிஷேகம் இருப்பதில்லை; இருக்கிறபடி காரியங்களை கவனித்துகொள்வதே அவர்களுக்கு தர்மசங்கடமாகி விடுகிறது. ஆடுகள் போஷாக்கு குறைவினால் வாடத் துவங்குகின்றன. மட்டுமல்ல, பெரிய சபைகளை நடத்தி, அதில் இன்பங்கண்ட வர்கள் தங்களது உடன் மூப்பர்களில் சிலருக்கு அனுபவமும் வரமும் கூடுதலாயிருந்தாலும் சபை களைத் தங்கள் மகன்களிடமேயன்றி வேறு எவரிட மும் ஒப்படைக்கத் தயங்குகின்றனர். துக்ககரமான இப்போக்கு பெந்தெகொஸ்தே சபை பிரிவினரிடம் சகஜமாக உள்ளது.

திருச்சபை மக்களின் எண்ணிக்கை சில நூறுகளைத் தாண்டும்போது சபையை இரண்டு மூன்றாகப் பிரித்து பல்வேறு இடங்களில் நாட்டுவது நன்று. இப்படிச் செய்வது அடுத்த வரிசையினர் தலைமைத்துவத்தில் வளரவும் பல்வகையில் புதுப் பொலிவுடன் செயல்படவும் வழிவகுக்கும். எல்லா ஞாயிறு ஆராதனைகளிலும் "பிரதம" போதகர் கட்டாயம் பங்குபெறவேண்டுமென விரும்பக் கூடாது. மாறாக, கூடியமட்டும் திருச்சபை அங்கத் தவர்களுக்கு முன்னறிவிப்பின்றி, அவர் "கிளைச்" சபைகளின் ஆராதனைகள் ஒவ்வொன்றிலும் பங்கு பெற முற்படவேண்டும்.

The Cross and the Switchblade என்ற பிரபல நூலின் ஆசிரியராகிய டேவிட் வில்கர்சன் தனது ஞாயிறு ஆராதனையில் யார் பிரசங்கிப்பது என்பதை தனது உடன் மேய்ப்பரோடு முன்னதா கவே கலந்தாலோசித்து தீர்மானித்து விடுகிறார். அது பிரசங்கத்திற்கு முந்திய கடைசி பாடல் பாடப் படும்வரை ஓர் இரகசியமாகவே வைக்கப்படும். தனது பிரசங்கத்திற்காக மட்டும் மக்கள் சபைக்கு வரக்கூடாது என்பது அவரது தாற்பரியம்.

ஆங்காங்கே இவ்விதமான திருச்சபைகள் நாட்டப்படும்போது சுற்றுப்புற சுவிசேஷ பணிகளில் கூடுதல் கனி நிறைந்ததாயிருக்கும். தூவப்படும் வரை உப்பினால் பயனென்ன? நமது கூடுகைகள் இவ்விதம் பிரிக்கப்படாவிடில் பல மக்களிடையே ஊடுருவல் சாத்தியமன்று. வீடுகள்தோறும் சபை கூடிவந்ததே ஆதிச்சபையின் அமோக வளர்ச்சிக்கு ஓர் இரகசியமாயிருந்தது (அப்போஸ்தலர் 2:46,47). இராணுவத்தில் உயர் அதிபதிகளெல்லாரும் ஒரே வாகனத்தில் பயணம் செய்ய விரும்ப மாட்டார்கள் தெரியுமா? சபையை சிறு சிறு கூட்டங்களாகப் பிரிந்து செயற்படச் செய்யாவிட்டால், நேரமும் பலமும் பணமும் பெரிய பெரிய கட்டிடங்களைக் கட்டுவதிலும் கண்காணிப்பதிலுமே செலவழிக்கப் படவேண்டியதிருக்கும். நாம் சொத்துக்கள் மீதல்ல, மக்கள் மீதே பணத்தை அதிகமாய்ச் செலவழிக்க வேண்டும். எளிய கட்டிடங்களில் திருப்தியடைய வேண்டும். இனிவரும் காலங்களில் திருச்சபை உபத்திரவத்திற்கு முகங்கொடுக்க நேரிடும். பத்து சிறிய அமைப்புகளைத் தாக்குவதைவிட பிரமாண்ட ஒரு கட்டிடத்தைத் தகர்த்துவிடுவது சுலபம். ஜாக்கிரதை! ஆண்டவரது கரம் கூடயிருந்ததோடு ஆங்காங்கே உள்ள "மக்களின் தயவும்" கிடைக்க பெற்றமை ஆதி திருச்சபையினருக்குக் கூடுதல் பெலனாக இருந்தது (அப். 2:46).

முழு உலகமும் நற்செய்தி மயமாக்கப்படு வதே கடவுளின் பிரதான நோக்கமாகும் (மத் 24:14; அப்.1:7,8; 2பேது.3:9). நமது சபை கட்டிடத்திற்காக செலவு செய்வதை நிறுத்தி, சுவிசேஷம் அறிவிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படாத இடங்களில் அதைச் செலவிடுவோம் (ரோமர் 15:20-22). இது சபைகளுக்கிடையிலான இரகசியப் போட்டி மனப்பான்மையை நிறுத்தும். சபை மட்டுமல்ல, மிஷனரிச் சங்கங்களும் அளவில் பெரிதாகிக்கொண்டே போகக்கூடாது. பல ஆயிரம் மிஷனரிகளைக் கொண்டு ஒரே இயக்கமாய் இயங்குவதைவிட தலா இருநூறு ஊழியரைக் கொண்டு ஐந்து சங்கங்கள் செயல்படுவதுமேல். எந்தளவிற்கு "உறுதிப்படுத்த" முடிகிறதோ அந்த அளவிற்குத்தான் "நீளப்படுத்த" வேண்டும் (ஏசாயா 54:2). இல்லையேல் அது விசுவாசமோ தரிசனமோ அல்ல, துணிகரம்!

***கேள்வி:* சுயாதீன ஊழியங்கள் சரியா?**

*பதில் :* பழைய உடன்படிக்கையின் காலத்தில் யாவும் தேவ ஆலயத்தையே மையமாய்க்கொண்டு நடந்தன. விரும்பிய இடங்களிலெல்லாம் பலி செலுத்த மக்கள் அனுமதிக்கப்படவில்லை (உபா. 12:5,13). ஆனால் புதிய உடன்படிக்கையின் கீழ் இரண்டு மூன்று பேர் இயேசுவின் நாமத்தில் "எங்கு" கூடினாலும் அங்கு அவர்கள் நடுவில் அவர் இருப்பார்(மத்.18:20). ஆராதிக்கவோ வேறு எதைச் செய்யவும் ஓரிடத்தைவிட இன்னொரு இடம் புனிதமானது என்று எதுவும் கிடையாது (யோவா. 4:21-23) பழைய உடன்படிக்கையின் கீழ், ஆசாரியத்துவம் 12 கோத்திரங்களில் ஒன்றிற்கு மட்டும் சொந்தமாக இருந்தது. இப்பொழுதோ தேவப் பிள்ளைகள் யாவரும் ஆவிக்குரிய பலிகளைச் செலுத்தும்படி தேவனுக்குமுன் ராஜரீக ஆசாரியராய் இருக்கின்றனர்(1பேதுரு 2:5,9).

ஆகவே, தனிப்பட்ட முறையில் கிறிஸ்தவர்கள் அனைவரும் உள்ளூர் திருச்சபைகளின் ஆராதனைகளிலும் பணிகளிலும் ஈடுபடவேண்டும்; ஆனால் அதேவேளையில் உள்ளூர் சபைகளின் நிர்வாகத்திற்குட்படாத ஊழியங்கள் எத்தனையோ நடைபெறலாம். வேதாகம மொழிபெயர்ப்பு பணி, வேதாகம சங்கங்கள், நிவாரணப்பணி, மருத்துவ ஊழியம், முன்னோடி மிஷனரிப் பணி போன்றவை இதற்கு உதாரணங்களாகும். அப்போஸ்தலர்களும் பவுலும் எந்தவொரு குறிப்பிட்ட உள்ளூர் சபையினாலும் நிர்வகித்து இயக்கப்படவில்லை. பயணம் செய்த பாதைகளிலெல்லாம் ஆங்காங்கே இருந்த உள்ளூர் சபையோடு ஐக்கியப்பட்டுக்கொண்டனர்.

உள்ளூர் சபை ஊழியமென்றாலும், பொது ஊழியமென்றாலும் ஊழியரிடையே ஒருவருக்கு ஒருவர் பொறுப்பு என்று இல்லையேல் அவ்விதச் சுயாதீனம் வேதத்திற்குப் புறம்பானதே. அப்படியே உள்ளூர் சபைகளைப் பொருத்தமட்டிலும் ஒருவர் தான் தலைவரெனும் நிலை சரியல்ல. மேய்ப்பர், மூப்பர் அல்லது கண்காணி என்பவையெல்லாம் ஒரே ஊழிய நிலையைக் குறிக்கும் வெவ்வேறு பதங்களாகும். இவை எப்பொழுதுமே பன்மையில் தான் குறிப்பிடப்பட்டுள்ளன (உ-ம்: அப் 20:17,28). ஊர்விட்டு ஊர் தாண்டிச் செய்யப்படும் ஊழியங்களிலும் பன்மைத் தலைமைத்துவம் இருக்க வேண்டும். இயேசு தமது சீடரை இரண்டிரண்டு பேராய் அனுப்பினார். பவுலுக்கு அவனது மிஷனரி குழுவில் எப்பொழுதும் ஒருசில துணை ஊழியர் இருந்தனர். பணக் காரியங்களில் சுயாதீனம் ஊழலுக்கு வழிவகுக்கும். செய்தியில் சுயாதீனம் வஞ்சகத்திற்கு வழிநடத்தும். ஊழிய முறைகளில் சுயாதீனம் வசனத்திற்கு ஒவ்வாத செயல்பாடுகளுக்கு வழி திறக்கும். நிர்வாகத்தில் சுயாதீனம் அதிகார துர்ப்பிரயோகத்திற்கு வழியுண்டாக்கும்.


சுயாதீனமாய்த் தனித்துச் செயல்பட்டால் நாம் அதிகம் சாதிக்கமுடியாது (பிர.4:9). சுயாதீனம் நமக்கு வேலை திருப்தியளிக்கலாம்; ஆனால் இறையரசிற்கு அதிக இலாபம் கிட்டாது. சுயாதீன ஊழியங்கள் பெருகும்போது ஏற்கனவே செய்யப்பட்டவையே திரும்பத் திரும்பச் செய்யப்படுவதால் இறையரசிற்கான பணம், பலம், நேரம் யாவும் வீணாகும். கணக்கொப்புவிப்பு நிறைந்த குழு ஊழியமே புதிய ஏற்பாட்டு முறையாகும். குழு ஊழியமென்பது கடினம்தான். ஆனால் அது சுயத்திற்குச் சாவு மணியடிக்கும். சிங்கங்களுக்குக் கூண்டுகள் பிடிக்குமோ? ஆயினும், ஊழியர்கள் தாங்களாகவே முதிர்ந்த பக்குவமான பிற ஊழியரோடு பரஸ்பர பொறுப்பு உறவைப் பேணுவது பாதுகாப்பானது.

சம்பளம் வாங்குவதில்லை, விசுவாசத்திலேயே வாழுகிறோமென்று சில சுயாதீன ஊழியர் பெருமையடித்துக் கொள்வதுண்டு. நிறுவனங்களில் பணியாற்றுகிறவர்களும் விசுவாசத்தில்தான் வாழுகின்றனர். மாதாமாதம் தேவன் தம் பிள்ளைகளின்ஊடாக காணிக்கைகளை அனுப்பித் தங்கள் தேவைகளைச் சந்திப்பாரென்று அவர்கள் "கூட்டு" விசுவாசத்தை கிறிஸ்தவ ஊழிய நிறுவனங்கள் அப்பியாசிக்கின்றன. அன்றன்றுள்ள ஆகாரத்தை "எனக்கு" இன்று தாரும் என்றா நமது ஆண்டவர் போதித்தார்? "எங்களுக்கு" என்றுதானே போதித்தார்? முடிவாக, தேவ ஊழியத்தில் பணியாற்றும் ஒவ்வொருவருக்கும் ஏற்றவிதத்தில் கர்த்தர்தாமே நிறைவான பலனைக் கட்டளையிடுவாராக! ❑

**(இக் 'கேள்வி பதில்' டாக்டர் ஆர்.ஸ்டான்லி அவர்களின் 'தெளிவான பதில்கள்' என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது. ஆவிக்குரிய வாழ்க்கை, வேதாகமம், நடைமுறை வாழ்க்கை சம்பந்தமான உங்கள் கேள்விகளை <u>'கேள்வியும் பதிலும், சத்தியவசனம், த.பெ. 1012 கொழும்பு'</u> என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- மயுக பெரேரா -

# நன்றி செலுத்து...!

"நன்றியறிதலுள்ளவர்களாயும் இருங்கள்" என்று வேதாகமம் நம்மை எச்சரிக்கின்றது (1தெச. 5:18, கொலே.3:15, எபே.5:2, யோபு 1:21) நாம் அப்படிச் செய்கிறோமா?

அப்படிச் செய்யாத அநேகர் ஒவ்வொரு காரணங்களைச் சொல்வதுண்டு. 'இந்த மோசமான சூழ்நிலையில் ஏன் தேவனுக்கு நன்றிசெலுத்த வேண்டும்?' என கேட்போம். 'இப்படியான ஒரு இக் கட்டுக்குள் இருக்கும் என்னிடம் நன்றியை தேவன் எப்படி எதிர்ப்பார்க்கமுடியும்' என தர்க்கிப்போம். நன்றி செலுத்தாமல் இருப்பதற்கான காரணம் இதுவே. எல்லா சூழ்நிலையிலும் தேவன் எம்மிடம் நன்றிகூறுதலை எதிர்ப்பார்ப்பது நியாயமற்றதாக எமக்குத் தோன்றுகின்றது.

அப்படியானால், எதற்காக தேவன் எம்மிடம் நன்றியை எதிர்ப்பார்க்கிறார்? கண்மூடித்தனமான கீழ்ப்படிதலை எம்மிடம் எதிர்ப்பார்ப்பவரல்ல அவர். 'தேவன் நன்றி செலுத்தும்படி கூறியுள்ளதால் நாம் (காரணம் தெரியாமல்) இதைச் செய்கிறோம்' என சிலர் கூறுவதுண்டு. நமக்கு அவசியமானதை நிறைவேற்ற தேவ மகிமையை விளங்கப்பண்ணும் ஒரு இரகசிய கருவியாக இது உள்ளது. "நாம் தேவனை நினைக்கும்போது, ஏற்கனவே நன்றி செலுத்திய காரியத்தை தேவன் நினைத்து அதைச் செய்வார்" என சிலர் தவறாக கற்பிக்கின்றனர்.

எல்லாநேரத்திலும் நன்றிசெலுத்த வேண்டுமென தேவன் எதிர்பார்க்கின்றார். அதற்கான நியாயமான காரணமுண்டு. ஏனெனில் ஜீவனுள்ள அவர் எதிர்மறையான சூழ்நிலைகளையும் நன்மையாக மாற்றத்தக்க கிரியை நடப்பிக்கிறார்.

"சகோதரரே, பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" என்று யாக்கோபு கூறுகிறார். அதை எம்மால் செய்யமுடியும். ஏனெனில் விசுவாச பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று நாம் அறிந்துள்ளோம். ஆகவே நாம் முதிர்ச்சியை நோக்கி வழுவாமல் வளரமுடியும். நாம் முகங் கொடுக்கும் பரீட்சைகளில் தோற்றுப்போகாமல், அதினால் இயேசுவைப்போல் உருமாறுவதையே அவர் எதிர்பார்க்கின்றார்.

2கொரிந்தியர் 12:7 இல் பவுல் கூறுகிறார், "என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; அது என்னை விட்டு நீங்கும்படிக்கு, மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன்." கடின நேரங்களை எம்மை விட்டு நீக்கிப்போடும்படி ஜெபிப்பதில் தவறில்லை. எனினும் அத் தருணத்தின் உன்னத நோக்கத்தை நாம் இழந்துவிடக்கூடாது. பவுல் கூறுகிறார், அதற்கு அவர்: "என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்றார். ஆகையால், "கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டு வேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்து வினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களி லும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்."

தேவன் பவுலின் முள்ளை அகற்றவிட வில்லை. அதன்மத்தியிலும்கூடவேயிருந்து கிரியை நடப்பிப்பதை பவுலுக்கு ஞாபகப்படுத்தினார். ஆகவே அச்சந்தர்ப்பத்திலும், அதற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்தமுடிந்தது. குறிப்பிடத்தக்க சோதனையை பவுல் கடந்து சென்றிருக்காவிடில், அதற்குரிய ஆசீர்வாதத்தை இழந்திருப்பான்.

ரோமர் 8:28 ல், "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது" என்று பவுல் கூறுகிறார். இதனை அறிந்திருந்தால், எப்பொழுதும் தேவனுக்கு நாம் நன்றி செலுத்துவோம். அதை நாம் செய்யவேண்டும். இல்லாவிடில், நாம் தேவனையும் அவருடைய காரியங்களையும் அறியாமலிருக்கிறோம் என்பதே வெளிப்படை.

நன்றி செலுத்தாமைக்கு இன்னுமொரு காரணம், நாம் தேவனை மறந்துவிடுவதாகும். அவர் எங்கேயிருக்கிறார்? அவர் செய்த காரியம் என்ன? என்ன செய்கிறார்? என்பதை மறக்கிறோம்.

மிகுதி 25ம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தேவனைத் துதிக்கும்படியாகவே நாம் அனைவரும் சிருஷ்டிக்கப்பட்டுள்ளோம். துதித்தல் என்பது ஆவிக்குரியது என்றும் சரியாகவும் முறையாகவும் செய்யவேண்டியது என்றும் தேவனைத் துதிப்பது என்பது இலகுவான காரியம் அல்ல என்பதும் அநேக மக்கள் அறிந்துவைத்துள்ளனர். எனினும் தேவனை அவர்களால் ஏன் துதிக்க முடியவில்லை என்பதைக் குறித்த விழிப்புணர்வு அற்றநிலையில் தேவனுடன் நிரந்தரமற்றதும் புறக்கணிக்கப்பட்டதுமான நிலையிலிருந்தே இதனைச் செய்கிறார்கள். தேவனை துதிப்பதிலிருந்து எமக்கு தடையாக இருக்கின்ற ஒருசில காரியங்களை நாம் இக்கட்டுரையில் பார்க்கப்போகின்றோம். இவற்றை நாம் மேற்கொள்ள வேண்டுமென தேவன் எம்மிடம் எதிர்பார்க்கின்றார். தேவனைத் துதிக்காமைக்கான எந்தவொரு காரணத்தையும் அவர் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

## 1. பாவம்.

துதித்தலின் முதல் தடைக்கல் பாவம் ஆகும். மனந்திரும்பாத ஒருவர் தேவனைத் துதிக்க முடியாமைக்கான அடிப்படை காரணம் இதுதான். ஒரு சில கிறிஸ்தவர்கள் துதிக்காமைக்கும் இது தான் காரணம். அறிக்கையிடப்படாத பாவங்கள் தேவனிடமிருந்தும் அவரது பிரசன்னத்திலிருந்தும் எம்மை தூரமாக பிரிக்கின்றது. வாழ்க்கையில் பாவங்கள் மன்னிக்கப்படாவிட்டால் நாம் பிசாசிற்கும் நரகத்திற்கும் அடிமைகளாகவே இருப்போம். தாவீது இவ்வாறு கூறுகிறார், "என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்." (சங் 66:18) பாவமானது தேவனிடமிருந்து எம்மை முற்றிலும் வேறுபிரித்து விடுகின்றது (ஏசாயா 59:2). ஏற்கனவே அனுபவித்த பாவ சந்தோஷங்களின் ஐக்கியத்தினை விட்டு நாம் விலகவேண்டும். தேவனிடம் எம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு அவரது மன்னிப்பை ஏற்றுக்கொள்ளும்போது பாவங்கள் கழுவப்படுவதோடு அவருடனான ஐக்கியம் மீளவும் சரியாக கட்டியெழுப்பப்படும். அப்போது துதித்தலானது எம்மிலே வெளிப்படும். (1யோவான் 1:9).

## 2. குற்றஞ்சாட்டு.

"நாம் தேவனால் மன்னிக்கப்பட்டு இருக்கிறோம்" என்பதை ஏற்றுக்கொள்வது அவசியமானது. அநேக கிறிஸ்தவர்கள் குற்றஞ்சாட்டுதலுக்குள் அகப்படுகிறார்கள். தேவன் உண்மையாகவே அவர்களை முற்றிலும் விடுதலையாக்கி மன்னித்திருக்கும்போது அவர்களால் தம்மை மன்னிக்க முடியவில்லை. இதன் விளைவாக அவர்கள் தங்களை அபாத்திரர் என உணருகிறார்கள். விடுதலை யோடு துதிப்பது தடைப்படுகின்றது. தேவனுக்கு முன்பாக தங்கள் கரத்தை உயர்த்த அவர்களுக்கு தயக்கம் ஏற்படுகின்றது.

நம்மை நாமே அலசி ஆராய்வோமானால், தோல்விகளையும், குற்றங்களையும், பலவீனங்களையும், தவறுகளையும் இயல்பாகவே கண்டு கொள்வோம். ஒருவரும் பரிபூரணமானவர்களல்ல.

குற்றஞ்சாட்டுக்களை மேற்கொள்ள நாம் எம் சிந்தனைகள் செயற்பாடுகளில் தங்கியிராமல் இயேசுவை நோக்கிப் பார்க்கவேண்டும் (எபி 12:2). அவ்வாறு நாம் இயேசுவை நோக்கிப்பார்க்கும் போதும் அவரைக்குறித்து தியானிக்கும்போதும் அவரே எமது சிந்தனைகளை ஆட்கொள்ளுவார், அப்பொழுது அவரை விருப்பத்தோடு ஆராதிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. உலக ஆசை.

"உலக ஆசை" பற்றி ஒலிவர் கிரேம்வெல் குறிப்பிடும்போது "இயேசுவை விட்டு எம்மை பிரிக்கின்ற அனைத்துமே உலக ஆசை" என்பதாக கூறியுள்ளார். உலக ஆசையானது ஆவிக்குரிய காரியங்களுக்கு எதிரானது. எமது மனதிலும் எண்ணத்திலும் உலக காரியங்களே மையமாக இருக்கும்போது தேவனைப் பற்றிய காரியங்களுக்கும் அவரது ராஜ்யத்தைக்குறித்த காரியங்களுக்கும் இடமில்லாது போய்விடுகின்றது.

உலக ஆசை நிறைந்த மக்கள் அடிக்கடி தம்மைக்குறித்து சிந்தித்து பெருமைப்படுவார்கள். அத்துடன் தேவனைத் துதிக்கும்போது மிகவும் உணர்ச்சிவசப்படுவார்கள். அது அவர்களது மாமிச தன்மையை வெளிப்படுத்துகின்றது. இப்படிப்பட்டவர்கள் இன்னுமின்னும் உள்ளத்தில் கிறிஸ்துவை மையமாக்கி, அவரைத் துதிக்கவேண்டும். கிறிஸ்தவர்களான எம் முதல் சிந்தனையானது தேவனைப் பிரியப்படுத்துவதேயாகும். இது ஒரு சாதாரண மனிதனை திருப்திப்படுத்துவது போல் அல்ல. நாம் சகமனிதரில் அக்கரைகொண்டு அவர்களது ஏற்றுக் கொள்ளுதலை பெற்றுக்கொள்ளும்போது நாம் தேவனைப் பிரியப்படுத்துவதில் தவறிவிடுகின்றவர்களாக இருப்போம். இதுவும் அபாயகரமானது.

### 4. தேவனைக்குறித்த தவறான மனப்பான்மை.

இதுவும் தேவனைத் துதிக்கவிடாமல் செய்யும் ஒரு பெரிய விடயமாகும். நம்மில் அநேகருக்கு தேவனைக் குறித்த தவறான எண்ணங்களே காணப்படுகிறன. சிலர் அவரை எப்பொழுதும் ஒரு காப்பாற்றுபவராக மட்டுமே நினைக்கின்றார்கள். இன்னும் சிலர் தோல்வி ஏற்படும் என எண்ணி ஓடி வருகிறார்கள். பலர் தாம் நினைக்கும் அனைத்தையும் அவர் செய்யவேண்டுமென விரும்புகிறார்கள்.

தேவனைக் குறித்த சரியான அபிப்பிராயம் எமது இருதயத்திற்குள் எழுந்தால் மட்டுமே சரியான துதித்தல் எம்மிடமிருந்து வெளிப்படும். தேவனைப் பற்றிய தவறான மனப்பான்மையிலிருந்து எம்மை விடுவித்துக்கொள்ள வேதாகம வாசிப்பு மிகவும் அத்தியாவசியமானதாகும். நாம் அதைத் திறந்து பரிசுத்த ஆவியானவர் வேத சத்தியங்களை வெளிப்படுத்தும்படி அவரை நாம் அனுமதித்தால் மட்டுமே அதை சரியாக புரிந்து கொள்ளக்கூடும். ஆனாலும் வேதம் வாசிக்கின்ற அநேகர் தம் மனதை சத்தியத்தை அறிந்துகொள்ள முடியாதவண்ணம் பூட்டியே வைத்திருக்கின்றனர். தேவனைக்குறித்த சரியான விழிப்புணர்வானது, அவர் யார் என்றும், எப்படிப்பட்டவர் என்றும் அறிந்துகொள்ள உதவுவதோடு அவரை துதிப்பதற்கும் ஆராதிப்பதற்கும் எம்மை வழிநடத்தும்.

### 5. மதரீதியான பாரம்பரியம்.

கிறிஸ்து வாழ்ந்த நாட்களிலும்கூட, பாரம்பரிய காரியங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது (மத்தேயு 15:6). இன்றும் கூட அநேக கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ பாரம்பரியம் என்று அழைக்கப்படும் மாயைக்குள் சிக்குண்டு இருக்கிறார்கள். பாரம்பரிய துதித்தலானது ஒருவித உணர்வுரீதியானது. வேதாகமத்தின் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிவதைக் காட்டிலும், அவர்கள் மனிதர்களுடைய சமய பாரம்பரிய முறைகளையே பின்பற்ற துணிகின்றார்கள். இங்கு நாம் கவனிக்கத் தக்க விடயம், மனிதர்களைக் காட்டிலும் நாம் தேவனையே அதிகமாக பிரியப்படுத்தவேண்டும் என்பதாகும் (கலாத்தியர் 1:10). "சமயம் ஒருவரைக் கட்டுப்படுத்தும். மனந்திரும்புதலோ விடுவிக்கும்" என்பதை மறந்துவிடாதிருங்கள். தேவனில் நம்பிக்கை வைக்கிறவர்கள், தேவன் விரும்புகின்ற விதமாகவே வாழ்வார்கள்.

### 6. பெருமை

துதித்தலை வெளிப்படுத்த தடைகல்லாக பெருமை காணப்படுகின்றது. லூசிபரும் அவன் நண்பர்களும் தங்கள் பெருமையினாலேயேதான் விழுந்தார்கள். பொதுவாக, பெருமையுள்ள ஒருவர் தனது இருதயத்தில் பெருமை இருப்பதை ஏற்றுக் கொள்ள விருப்பமற்றவராகவே இருப்பார். இந்த பாவத்தை ஏற்றுக்கொள்ள எமக்குள்ளிருக்கும் பெருமைவிடாது. தேவன் மட்டுமே இத்தகைய பெருமைகளை உடைத்து அந்த நபரை முற்றிலும் விடுதலையாக்கக் கூடியவர். ஆகவே நாமே சரியானது இன்னதென்றும் பொருத்தமான காரியங்கள் இன்னதென்றும் கண்டு அதன்படி நடக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

### 7. மனிதரின் பயம்.

"மனுஷருக்கு பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்" என நீதிமொழிகள் 29:25ல் வாசிக்கிறோம். எண்ணத்திலும் கருத்திலும் மனிதருக்குப் பயப்படுதல் காரணமாக கண்ணியில் நாம் அகப்படலாம். "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தில் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு." (நீதி 9:10) உண்மையாகவே தேவனுக்கு பயந்து நடப்போமானால், மனிதருக்குப் பயப்படத் தேவையில்லை. எல்லாக் காரியத்திலும் எல்லாச் சமயத்திலும் தேவனை பிரியப்படுத்த நினைப்போமானால், நிச்சயமாகவே தேவனைப் போற்றித் துதிக்கின்றவர்களாகவே இருப்போம். மற்றவர்கள் வற்புறுத்துவதின் காரணமாக நடந்துகொள்ளாமல், தேவனை வாஞ்சையோடு தேடுகின்றவர்களாக இருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. சாத்தானின் தலையீடு.

கடைசியாக மிக முக்கியமான தடைகல் பற்றி நாம் அறியாமலிருக்கக்கூடாது. அது சாத்தானின் செயற்பாடாகும். தேவனைத் துதிக்கின்ற மக்களை அவன் மிக வைராக்கியமாக பகைத்து தாக்குகின்றான். தேவனைப் பற்றிய சாத்தானின் மன எண்ணத்தில் ஆழமாக பொறாமை, பெருமை போன்றவை வேரூன்றியுள்ளது. அதனாலே அவன் தள்ளப்பட்டுப்போனான். அவனது பெருமையினால், தேவனைவிட தன்னை பெரியவனாக எண்ணத் தொடங்கினான். ஆகவே நாம் தேவனை துதிக்கவும் தேவனுக்கு மகிமை கொண்டுவரும் அனைத்தையும் தடுக்கவுமே அவன் விரும்புகிறான்.

ஒரு நபர் சாத்தானின் அல்லது அவனது தூதர்களின் நேரடி கட்டுப்பாட்டுக்குள் இருப்பானாயின், அந்த நபர் இயேசு என்ற பெயரைக் கூட உச்சரிக்க இயலாதவனாகவே இருப்பான். அதனை உச்சரிக்க முயற்சித்தாலும் அது கூடாமற்போகும். அல்லது அவனை அலைக்கழிக்கும். அவன் வாயிலிருந்து அந்த வார்த்தை வெளிவராது. ஆகவேதான் இயேசு என்ற நாமத்தை மக்கள் உச்சரிக்கும் போது அல்லது அதைக் குறித்து பேசும்போது சாத்தான் அவ்விடத்தை விட்டு ஓடிவிடுகின்றான். அந்த நாமத்திற்கு எதிராகவே சாத்தான் மிகவும் கடுரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றான். அவனின் சேனைகள், இயேசு என்ற தேவநாமத்தை துதிக்கவிடாமல் அதற்கெதிராக வன்முறைகள், தூஷணம், சாபம் போன்றவற்றை பாவித்தாலும்கூட அந்நாமத்திற்குமுன்பாக நிற்க அவனால் கூடாது.

## ஆராதனைக்கு ஒப்புக்கொடு.

ஒரு கிறிஸ்தவரான ஒருவர், தேவனைத் துதிக்கவும் அவருக்கு கனத்தைக் கொடுக்கவும் அவதானமுள்ளவராக துதித்தலில் விழிப்புள்ளவராக இருக்கவேண்டும். அவன் மனந்திரும்புவதோடு, துதிக்க தடையாக உள்ள காரியங்களில் இருந்து விடுதலைபெற வேண்டியது அவசியமாகின்றது. ஒவ்வொரு நபரும் தங்கள் இருதயத்தில் தேவனுக்கு கீழ்ப்படிகின்றவர்களாகவும் அவரைத் துதித்து அவருக்கு மகிமையை கொண்டுவருகிறவர்களாகவும் இருக்கவேண்டியது அவசியமாகும்.

> **தாவீது இவ்விதமாகக் கூறுகின்றார்:**
> **'சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக. அல்லேலுயா.' (சங்கீதம் 150:6)**
> **'மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள்.' (சங்கீதம் 115:17). ஆகவே நாம் தேவனைத் துதித்தலே தகும்!**

துதித்தலில் நிலைத்திருப்பது கடினமானது அல்ல. துதிக்கமுடியாத ஒரு நபருக்கு ஆவிக்குரிய ரீதியான உதவி தேவைப்படும். ஒருவேளை அந்த நபருக்கு எதிராக சாத்தான் செயற்பட்டுக் கொண்டிருக்கலாம். ஒவ்வொருவரது வாழ்விலும் அவற்றை உடைத்தெறியவேண்டும். அவ்வாறு உடைக்கப் படும்போதே அந்த நபர் தேவனை முற்றும் முழுவதுமாக ஆராதிக்கக்கூடியவராக மாறுவார்.

தேவனைத் துதிக்கமுடியாத நிலைமை உங்களிடம் காணப்படுமானால், ஏதோவொரு இடத்தில் பாவம், குற்றஞ்சாட்டு, உலகஆசை, தேவனைக் குறித்த தவறான மனப்பான்மை, மத ரீதியான பாரம்பரியம், பெருமை, மனிதரின் பயம், சாத்தானின் தலையீடு, கீழ்ப்படியாமை, கலகம் காணப்படுகின்றது என்பது தெளிவு. இத்தகைய அடிப்படையான காரியங்கள் சரிசெய்துகொள்ளப் படவேண்டும். தேவனைத் தேடுகின்றவர்களாக அவரைத் துதிப்பதும் அவருடைய பிரசன்னத்தை அனுபவிப்பதும் மகிழ்ச்சிகரமான விடயங்களாகும். ❑

**22ம் பக்க தொடர்ச்சி....**

தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாக இஸ்ரவேலர்கள் முறுமுறுத்ததை நாமறிவோம். வனாந்தரத்தில் எரிச்சலூட்டினார்கள். 400 வருட அடிமைநுகத்தை மறந்து, "எகிப்தில் இருந்திருந்தால் நலமாயிருந்திருக்கும்" என்று முறுமுறுத்தார்கள். இலகுவில் தேவனை மறந்துவிட்டார்கள். எனினும் தேவன் அவர்களுக்கு ஒரு தலைவனை ஏற்படுத்தி, எகிப்திலிருந்து அற்புதமாய் அவர்களை விடுவித்தார். இரவும் பகலும் தேவ பிரசன்னம் அவர்களோடு இருந்தது. பல எதிர்ப்பார்ப்புடன் வாக்குத்தத்த தேசத்தை நோக்கி பயணித்த அவர்கள், முறுமுறுத்துக்கொண்டே இருந்தனர். தேவன் செய்த சகல நன்மைகளைக் குறித்தும் அவர் யார் என்றும் சிந்திக்கவேயில்லை. ஆகவே தற்காலிக உபத்திரவம் அவர்களது சிந்தனைகளை ஆட்கொண்டது.

நன்றி செலுத்தாமைக்கான மூன்றாவது காரணம், தேவனை அற்பமாக எண்ணுவதாகும். இயேசு தாம் சுகமாக்கிய பத்து குஷ்டரோகிகளில் சமாரியன் மாத்திரமே (அவன் ஒரு யூதனல்லாத போதும்) திரும்பிவந்து நன்றிசெலுத்தினான். தான் தேவனின் அனுக்கிரகத்தைப்பெற தகுதியற்றவன் என்பதை அவன் நன்கு அறிந்தவனாக, தேவனுக்கு மகிமையைச் செலுத்தினான். மற்றவர்கள் தாம் பெற்ற சுகம் தமக்குரியது என்று நினைத்தார்கள். தேவன் கடன்பட்டுள்ளார் என எண்ணி, நாம் தேவனுக்கு நன்றிசெலுத்த மறந்து விடுகிறோம்.

எப்பொழுதும்.... நாம் தேவனுக்கு நன்றி செலுத்துவோமாக! ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றுக்கொள்!



தோல்விகளை நேசிக்கக்
கற்றுக்கொள்!
வெற்றி பிடிக்கும்.

வறுமையினை மேற்கொள்ள
கற்றுக்கொள்!
உழைக்கப் பிடிக்கும்.

மற்றவர்களை நேசிக்க
கற்றுக்கொள்!
வாழப் பிடிக்கும்.

தவறுகளை திருத்த
கற்றுக்கொள்!
தன்னம்பிக்கை பிடிக்கும்.


வாய்ப்புக்களை வரவேற்க
கற்றுக்கொள்!
மறுமலர்ச்சி பிடிக்கும்.

கடினமாய் உழைக்க
கற்றுக்கொள்!
தோல்வி ஓட்டம் பிடிக்கும்.

பெற்றோரை கனம்பண்ண
கற்றுக்கொள்!
வாழ்நாட்கள் விருத்தியாகும்.

உன்னை நேசிக்க
கற்றுக்கொள்!
உலகம் பிடிக்கும்.

உன்னதர் இயேசுவை
ஏற்றுக்கொள்!
எல்லாமே பிடிக்கும்.



ஒரு பாடசாலை மாணவியின் கவிதை

---




### ஏதேன் விபரங்களைப் பெற:

- இங்கு வெளிவரும் விளம்பரங்களில், "பொருத்த மானது என நீங்கள் நினைக்கும் விளம்பரத்திற்கான தகவல்கள் தேவைப்படின், "உங்கள் பெயர் முகவரி, தொலைபேசி போன்ற விபரங்களை விளம்பர இலக்கத்துடன்" தெளிவாக குறிப்பிட்டு அதற்கான முத்திரை உடன் எமக்கு அனுப்பிவைக்கவேண்டும்.
- நாம் உங்கள் விபரங்களை, விளம்பரம் கொடுத்தவருக்கு அனுப்பிவைப்போம். அவர்கள் விரும்பினால் மட்டுமே தொடர்பு கொள்வார்கள்.
- இப் பகுதியில் வெளியாகும் நபர்களைப் பற்றியோ அல்லது கொடுக்கப்படும் விபரங்களின் உண்மைத் தன்மைக் குறித்தோ சத்தியவசனம் உறுதிப்படுத்தவோ பொறுப்பேற்கவோ மாட்டாது.
- உங்கள் விபரங்கள் இப்பகுதியில் சேர்க்கப்பட வேண்டுமானால், அதற்கான விண்ணப்பப் படிவங்களை எமக்கு எழுதி பெற்றுக்கொள்ளவும்.
- உங்கள் விபரங்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் தரப்படாவிடில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். சொத்து, சீதனம், குலம் பற்றிய விபரங்கள் அதில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.
- ஒவ்வொரு விண்ணப்பமும் தனித்தனியாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

### ஏதேன் சஞ்சிகையில் பிரசுரிக்க:

- உங்கள் விபரங்களை சஞ்சிகையில் பிரசுரிக்க விரும்பினால், உரிய விண்ணப்பப்படிவத்தினை நிரப்பி, 2012 ஜனவரி மாதம் 20ம் திகதிக்கு முன் எமக்கு வந்து கிடைக்கும்படி அனுப்பிவைக்கவும். தாமதமாயின் அடுத்த சஞ்சிகையில் சேர்த்துக்கொள்ளப்படும்.
- இச்சேவைக்கு எவ்வித கட்டணமும் அறவிடப்பட மாட்டாது. இது சேவை நோக்கத்துடன், உங்கள் நன்மைக்காகவே செய்யப்படுகிறது.
- இதன் மூலம் பிரச்சனைகள் ஏதும் எழுமாயின், அதனை சம்பந்தப்பட்டவர்களே தீர்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு சத்தியவசன ஊழியர்களோ சத்தியவசன ஊழியமோ எந்தவிதத்திலும் பொறுப்பேற்க மாட்டாது.

சகல விபரங்களுக்கும் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**"ஏதேன்" த.பெ.1012, கொழும்பு, இலங்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமகன் விபரம்

(2011/E.M/3131) வயது 30, உயரம் 5'6". A.O.G சபை, க.பொ.த(உ/த) கற்று, ஆடைத் தொழிற்சாலையொன்றில் தையல் வேலை செய்யும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கினிகத்தேன).

(2011/E.M/3132) வயது 34, உயரம் 5'4". அங்லிக்கன் சபை, க.பொ.த(உ/த) கற்று Hotel Trade இல் தொழில்புரியும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 15).

(2011/E.M/3133) வயது 33, உயரம் 5'4" அங்லிக்கன் சபை, CIMA, ACMA கற்று ஆறு வருடங்களாக டுபாயில் IT Consultant ஆக கடமையாற்றும் மணமகனுக்கு மணமகளைத் தேடுகின்றனர். (அளவ்வ).

(2011/E.M/3134) வயது 30, உயரம் 5'6". A.O.G சபை, க.பொ.த(உ/த) கற்று இங்கிலாந்தில் Manager ஆக கடமையாற்றும் மணமகனுக்கு, ஆங்கிலம் தெரிந்த இரட்சிக்கப்பட்ட மணமகளைத் தேடுகின்றனர். (கண்டி).

(2011/E.M/3135) வயது 27, உயரம் 5'6". கெத்சமனே ஜெப நிலையம். க.பொ.த(உ/த) கற்று, Shipping Co-ordinator ஆக கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (ஜாஎல).

(2011/E.M/3136) வயது 24, உயரம் 5'11". A.O.G சபை, க.பொ.த(உ/த), கணணி மற்றும் ஆங்கிலம் கற்று, Sales Representative ஆக கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (பலாங்கொடை).

(2011/E.M/3137) வயது 29, மெதடிஸ்த திருச்சபை, க.பொ.த(உ/த) கற்று, தனியார் நிறுவனத்தில் 9வருடமாக Customer Care Assistant ஆக பணிபுரியும் மணமகனுக்கு, தொழில்புரியும் மணமகளைத் தேடுகின்றனர். (திருகோணமலை).

(2011/E.M/3138) வயது 35, உயரம் 5'4". Jesus Saves சபை, க.பொ.த(சா/த) கற்று, சொந்தமாக Printing Press வைத்திருக்கும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 15).

(2011/E.M/3139) வயது 41, உயரம் 5'9". A.O.G சபை, Computer Software கற்று Software Instructor ஆக கடமையாற்றும் மணமகனுக்கு, அழகிய குணமுள்ள கடவுள் பயமுள்ள 35 வயதிற்குட்பட்ட உயரம் 5'3". க.பொ.த(உ/த) கற்ற மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 5).

(2011/E.M/3140) வயது 25, உயரம் 5' 10". அங்கிலிக்கன் சபை, க.பொ.த(உ/த) CIMA கற்று Finance Executive ஆக கடமையாற்றும் மணமகனுக்கு, தொழில்புரியும் ஆங்கிலம் தெரிந்த மணமகளைத் தேடுகின்றனர். (நாவலபிடிய).

(2011/E.M/3141) வயது 31, உயரம் 5'5". Light House சபை, க.பொ.த(உ/த) கற்று, சொந்த வியாபாரம் செய்யும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கண்டி).

(2011/E.M/3142) வயது 28, உயரம் 5'6". லூத்தரன் சபை, ஆசிரியராக கடமையாற்றும் BA பட்டதாரியான மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். வெளிநாட்டு குரியுரிமையுடையவர் விரும்பத்தக்கது. (நுவரெலியா).

(2011/E.M/3143) வயது 27, உயரம் 6'. மெதடிஸ்த திருச்சபை, Business Management கற்று, Executive ஆக கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 10).

(2011/E.M/3144) வயது 26, உயரம் 5`4". A.O.G சபை, International Business Management பட்டம்பெற்ற மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 2).

(2011/E.M/3145) வயது 27, உயரம் 5'5". க.பொ.த(சா/த) கற்று ஊழியத்தில் ஈடுபட்டுள்ள மணமகனுக்கு, ஊழிய வாஞ்சையுள்ள மணமகளைத் தேடுகின்றனர். (கொச்சிக்கடை).

(2011/E.M/3146) வயது 46, உயரம் 5`7". அங்கிலிக்கன் சபை. நிரந்தர தொழில்புரியும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 6).

(2011/E.M/3147) வயது 31, உயரம் 5`8". அங்கிலிக்கன் சபை. B.Sc கற்று Port Authority யில் பணிபுரியும் மணமகனுக்கு, இரட்சிக்கப்பட்ட மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 6).

(2011/E.M/3148) வயது 29, உயரம் 5`6". அங்கிலிக்கன் சபை க.பொ.த(உ/த) கற்று ஆசிரியராக கடமையாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (நாவலப்பிட்டி). (மேலதிக விபரங்களை இவர்களோடு தொடர்பு கொள்ளும்போது மட்டும் தெரிந்துக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்).

# மீள்பிரசுரம்

(2011/E.F/2253) வயது 42, உயரம் 4'11". மெதடிஸ்த திருச்சபை, க.பொ.த(உ/த) கற்ற மணமகளுக்கு, உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ மணமகனைத் தேடுகின்றனர். (2-3 வயது குறைந்தவரும் பரவாயில்லை) (பருத்தித்துறை).

(2011/E.F/2263) வயது 42, உயரம் 5'2". கெத்சமனே சுவிசேஷ சபை, க.பொ.த(உ/த) கற்று, NGO வில் கடமையாற்றும் மணமகளுக்கு, உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 5).

(2011/E.F/2264) வயது 40, உயரம் 5'3". கெத்சமனே சுவிசேஷ சபை, I.A.B கற்று கணக்காளராக கடமையாற்றும் மணமகளுக்கு, உத்தியோகத்திலுள்ள மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 5).

(2011/E.F/2274) வயது 33, உயரம் 5'2". சுவிஷேச கூடார சபை. க.பொ.த(சா/த), தையல் டிப்ளோமா, கேக், ஐசிங் கற்ற யாழ். கிறிஸ்தவ சிறார் இல்லத்தில் வளர்ந்த பெற்றோரற்ற மணமகளுக்கு, மணமகனை தேடுகின்றனர். (கல்கிஸ்சை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமகள் விபரம்

(2011/E.F/2281) வயது 30, உயரம் 5'. அங்கிலிக்கன் திருச்சபை, க.பொ.த(சா/த) கற்ற மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். வேறு கிறிஸ்தவ சபைகளும் பரவாயில்லை.(கொழும்பு 13).

(2011/E.F/2282) வயது 28, உயரம் 5'2". அங்கிலிக்கன் சபை, க.பொ.த(உ/த), கணனி கற்று Operation Officer ஆக கடமையாற்றும் மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். கொழும்பிலிருப்பவர் விரும்பத்தக்கது.(வத்தளை).

(2011/E.F/2283) வயது 26, உயரம் 5'2". அங்கிலிக்கன் சபை, B.sc (கணனி) கற்று, Tutor இல் கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 15).

(2011/E.F/2284) வயது 34, உயரம் 5'5". DRC சபை, 10ம் வகுப்பு வரை கற்று, Hardware ஒன்றில் தொழில்புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 9).

(2011/E.F/2285) வயது 41, உயரம் 5'5". DRC சபை, 10ம் வகுப்பு வரை கற்று, House Maid ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 9).

(2011/E.F/2286) வயது 28, உயரம் 5'3". சுவிசேஷ கூடார சபை, 10ம் வகுப்பு வரை கற்று, பாடல் ஊழியம், தையல் வேலை செய்யும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். ஊழியம் செய்பவர் விரும்பத்தக்கது. (வத்தளை).

(2011/E.F/2287) வயது 38, உயரம் 4'10". இயேசு ஜீவிக்கிறார் சபை. க.பொ.த(சா/த) கற்று, கணனி துறையில் தொழில்புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (இராஜகிரிய).

(2011/E.F/2288) வயது 49, உயரம் 4'9". Divine Word Christian Assembly சபை, க.பொ.த(உ/த) கற்று, மும்மொழிகளும் தெரிந்த Clerk ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (ராகம). (மேலதிக விபரங்களை இவர்களோடு தொடர்புகொள்ளும்போது மட்டும் தெரிந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்).

(2011/E.F/2289) வயது 26, உயரம் 5'4.5". மெதடிஸ்த திருச்சபை. க.பொ.த(சா/த) கற்று தற்போது HSBC வங்கியில் Personal Banking Advisor ஆக பணிபுரியும் மணமகளுக்கு, வெளிநாட்டு மணமகனை தேடுகின்றனர். (வெள்ளவத்தை).

(2011/E.F/2290) வயது 34, உயரம் 5'2" அங்கிலிக்கன் சபை, க.பொ.த(உ/த) கற்று, வங்கியில் கடமையாற்றும் மும்மொழிகளும் தெரிந்த மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (பதுளை).

(2011/E.F/2291) வயது 27, உயரம் 5'4". மெதடிஸ்த திருச்சபை. க.பொ.த(சா/த) கற்று, ஆசிரியையாக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (வத்தளை).

(2011/E.F/2292) வயது 47, உயரம் 5'. வார்த்தையின் வல்லமை சபை. க.பொ.த(சா/த) கற்ற மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (மட்டக்களப்பு).

(2011/E.F/2293) வயது 28, உயரம் 5'6" A.O.G சபை, க.பொ.த(சா/த) கற்று, Cutting Opperator ஆக தொழில்புரியும் மணமகளுக்கு, இரட்சிக்கப்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். (நாவலப்பிட்டி).

(2011/E.F/2294) வயது 27, கெத்சமனே சுவிசேஷ சபை. க.பொ.த(உ/த) கற்று, Legal Associate ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 5).

(2011/E.F/2295) வயது 43, உயரம் 5'3". சுவிசேஷ கூடார சபை. Diploma in Pharmacy கற்று, Pharmacy Executive ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கல்கிஸ்சை).

(2011/E.F/2296) வயது 23, உயரம் 4'. A.O.G சபை, க.பொ.த(சா/த) சிங்கள மொழியில் கற்று, தொழில்புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கண்டி).

(2011/E.F/2297) வயது 25, உயரம் 5'. அங்கிலிக்கன் சபை, க.பொ.த(சா/த) கற்ற மும்மொழிகளும் தெரிந்த, தாயை இழந்த, உறவினர் வீட்டில் தங்கியுள்ள மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 13).

(2011/E.F/2298) வயது 31, உயரம் 5'5" கல்வாரி சபை, CIMA கற்று, Exacutive ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கல்கிஸ்சை).

(2011/E.F/2299) வயது 24, உயரம் 5'3". க.பொ.த(சா/த) கற்று, ஆசிரியராக கடமையாற்றும் பட்டதாரி மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொச்சிக்கடை).

(2011/E.F/2300) வயது 26, உயரம் 5'3". R.C சபை. AAT கற்ற மணமகளுக்கு, மணமகனை தேடுகின்றனர்.(கொழும்பு 15).

(2011/E.F/2301) வயது 34, உயரம் 5'2". R.C சபை. க.பொ.த(உ/த) கற்று, Nursery ஆசிரியராக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 15).

(2011/E.F/2302) வயது 34, உயரம் 5'. கல்வாரி பூரண சுவிசேஷ சபை. க.பொ.த(சா/த), கேக், ஐசிங் போன்றவை கற்ற Nursery ஆசிரியராகவும், ஊழியத்திலும் ஈடுபட்டுள்ள யாழ். கிறிஸ்தவ சிறார் இல்லத்தில் வளர்ந்த மணமகளுக்கு, மணமகனை தேடுகின்றனர். (யாழ்ப்பாணம்).

(2011/E.F/2303) வயது 25, உயரம் 5'. கல்வாரி தேவாலயம், க.பொ.த(உ/த) கற்று, Accounts Clerk ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (தெமட்டகொடை).


(2011/E.F/2304) வயது 30, உயரம் 5'4". அங்லிக்கன் சபை, க.பொ.த(உ/த) மற்றும் கணனி கற்று, Clerk ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (நாவலப்பிட்டி).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்!



அன்பு சிறார்களே,

மேலேயுள்ள படத்தை அழகிய வர்ணத்தால் நிறந்தீட்டி மகிழ்வதோடு நின்றுவிடாமல், "பரிசு" என்ற தலைப்பில் உங்கள் கவிதை, கதை, துணுக்குகளை அனுப்பிவையுங்கள்.

உங்கள் அழகிய ஆக்கங்களை 2012 ஜனவரி 20ம் திகதிக்குமுன் அனுப்பிவைக்கவேண்டிய முகவரி:

**சிறுவர் சோலை,**
***P.O.Box 1012,***
***Colombo.***

**அன்பு சிறார்களே,**

சிறுவர் சோலைப் பகுதிக்கு அநேகர் தங்களுடைய ஆக்கங்களை எழுதி அனுப்பி வைத்துள்ளபோதிலும், ஒரு சிலரின் பெயர்களே குலுக்கள் முறையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. பல்வேறு ஆக்கங்களை எழுதிய சிறார்கள் அனைவரையும் பாராட்டுவதோடு, தெரிவுசெய்யப்பட்டவர்கள் தங்களுடைய பரிசினை சத்தியவசன அலுவலகத்தில் திங்கள் - வெள்ளி வரை காலை 9மணி முதல் மாலை 4 மணி வரை நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

எமது முகவரி:

**சத்தியவசனம்,** சிறுவர் சோலை பகுதி, 120A, தர்மபால மாவத்தை, கொழும்பு 7.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Esoteric tradition

**டிசம்பர் 2010 – பெப்ரவரி 2011 மாதத்திற்கான சிறுவர்சோலை பகுதிக்கு ‘கிறிஸ்மஸ்’ என்ற தலைப்பில் ஆக்கங்களை எழுதி, படத்தை நிறந்தீட்டி அனுப்பிய சிறார்களில் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்கள் :**

01. மு. குளோரியா - சீதுவ
02. S. டிலுக்ஷிகா டிலானி -
03. G. டில்ஷானி - கொடகலை
04. T. பிகலியானா - கொழும்பு 15
05. S. சஞ்ஜோ - கொழும்பு 9
06. தேவதாசன் ஜுனியஸ் - கொட்டகலை
07. G. தர்ஷிகா - கொழும்பு 6
08. S. சுஷானிகா - கொழும்பு 10
09. M. சிந்துஜன் - கல்முனை
10. அமெண்டா லே - வத்தளை
11. து. மஞ்சுளா - பருத்தித்துறை
12. S. விதுஷானி - இராஜகிரிய
13. ந. டிலக்சிகா - மல்லாவி
14. ச. சர்ஜிகன் - மானிப்பாய்
15. சலோமி பிரிஸ்சிலா - கண்டி
16. அபிணி கல்நாயுடு - மாபோல
17. K. ரூத் ராஜிதா - மூதூர்
18. மிஷேல் அபிஷேக் - கண்டி
19. ச. சசிரேகா - மீசாலை
20. M. நிதர்ஷன் - பதுளை
21. தி. சிலுஜா - திருகோணமலை
22. ர. செலுமி நிர்மிகா - மட்டக்களப்பு
23. J. வெரோனிகா - கண்டி
24. S. ராதிகா - சங்கானை
25. V. P. எனோலியஸ் - கொழும்பு 5
26. து. துவாரகன் - யாழ்ப்பாணம்
27. நி. ஏஞ்சலா - கொழும்பு 10
28. ப. மிதுனா - ஆனைக்கோட்டை
29. ஜெ. மயூரா ரூத் - நீர்கொழும்பு
30. J. சதீஷ் - திருகோணமலை
31. மே. ஷரோன் - பெரியகல்லாறு 2
32. டெரிக் சுரேந்திரன் - மட்டக்களப்பு

**தெரிவுசெய்யப்பட்ட அனைவருக்குமுரிய பரிசினை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.** - ஆசிரியர்.

**மார்ச்–மே 2011 சஞ்சிகையின் சிறுவர்சோலை பகுதிக்கு படத்தை நிறந்தீட்டி, ஆக்கங்களை எழுதி அனுப்பிய சிறார்களில் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்கள் :**

01. ரா. ஜோயேன் - நுகேகொடை
02. S. சஜினி - கொழும்பு 9
03. P. ஜனார்த்தன் - மட்டக்களப்பு
04. ஆகாஷ் கிருஷாந்தன் - கம்பளை
05. பெயர் குறிப்பிடாத ஒருவர்.

**ஜுன் –ஆகஸ்ட் 2011 மாதத்தில் ‘மன்னிப்பு’ என்ற தலைப்பில் ஆக்கங்களை எழுதி, படத்தை நிறந்தீட்டி அனுப்பிய சிறார்களில் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்கள் :**

01. ரா. சுரேந்திரன் - மட்டக்களப்பு
02. M. பியூலா இவான்ஜலின் ·
03. V. கிலிண்டா - டிக்கோயா
04. றொஷானி(கிறிஸ்டினா) - ஆனைக்கோட்டை
05. வினோதன் பிளசிங் - களுவாஞ்சிகுடி
06. K. ராஜிதா - திருக்கோணமலை
07. V. ருஷான் - நல்லூர்
08. க. மாலதி - அக்கறைப்பற்று

**செப்டெம்பர் – நவம்பர் மாத இதழுக்கான சிறுவர்சோலை பகுதிக்கு ‘அன்பு’ என்ற தலைப்பில் ஆக்கங்களை எழுதி, படத்தை நிறந்தீட்டி அனுப்பிய சிறார்களில் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்கள் :**

01. கே. எ. சேர்லி - உக்குவளை
02. த. அனுஜிற்றா - யாழ்ப்பாணம்
03. பே. வி. டிலுஷா - கல்முனை.
04. M. ஸ்டெபானி - கண்டி
05. அ. திர்ஷா - ஒட்டுசுட்டான்
06. பே. வி. துஷாறா - கல்முனை 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உனக்காக நான்

மேரி மார்கிரேட் ஆண்டீ.

எங்கு பார்த்தாலும் வயல்வெளி, ஆடு, மாடு, மரங்கள் என்று அந்த சிறிய கிராமமே ஒரு சோலைவனமாயிருந்தது. அங்கு ஒரு சிறிய குடிசையில் ஒரு அம்மா கூலி வேலைசெய்து தன் மகனை படிக்க வைத்து வந்தார்கள். பாடசாலை முடிந்து வீடு திரும்பும் மகன் கூறும் கதைகளை கேட்பது தாய்க்கு மகிழ்ச்சியைத் தந்தது.

ஒருநாள் மகனுக்கு சொந்தமில்லாத ஒரு அழிரப்பர் அவனது புத்தகப் பையில் இருந்தது. அதை மகனிடம் காட்டி, "இது உன்னுடையது இல்லையே, இது யாருடையது?" எனக் கேட்டாள். "அம்மா, பாடசாலையில் ஆசிரியருடைய மேசை யிலே கிடந்தது. அதை எடுத்துவிட்டேன்" என்றான் மகன். "இது உனக்குச் சொந்தமானதல்ல. இதை எடுத்த இடத்தில் கொண்டுபோய் வைத்துவிடு. ஆசிரியரின் மேசையிலிருப்பதை எடுப்பது களவு செய்வதற்கு சமம். 'களவு செய்யாதிருப்பாயாக' என வேதாகமம் கூறுகின்றது" என புத்திமதிகளைச் சொன்னாள் தாய். அவனும் தனது தாய் கூறிய வண்ணமாகவே அழிரப்பரை இருந்த இடத்தில் கொண்டுபோய் வைத்துவிட்டான்.

இன்னொரு நாள், சக நண்பனின் பையிலி ருந்த ஒரு அழகான பேனையை திருடிக்கொண்டு வந்திருந்தான். அது அம்மாவிடம் அகப்பட்டுவிட்டது "ஏன் பேனையை திருடினாய்?" என தாய் பிரம்பைத் தூக்கி அதட்டியவுடன், பெரிய சத்தம்போட்டு அழுது, "இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன்" என்று சொன்னான். அம்மாவும் அவனை மன்னித்து விட்டுவிட்டாள்.

இரு நாட்களுக்குப் பின், ஒரு அழகான புத்தகத்தை திருடிக்கொண்டு வந்தான் அவன். இம்முறை அம்மா ஒரு கம்பியை அடுப்பில் நன்றாக சூடாக்கி, "மகனே எவ்வளவு சொல்லியும் நீ என் சொல்கேளாமல் திருடுகிறாய். ஆகவே உன்னை இன்று கட்டாயம் தண்டிக்கவேண்டும்" என்று கூறி, சூடாக்கிய கம்பியை எடுத்து மகனின் கையின் அருகே கொண்டுவந்தாள். அதைக்கண்டு பயந்து அலறிய மகன், "அம்மா, இனிமேல் இப்படிச் செய்யமாட்டேன்" என்று "ஓ" என சத்தமாக அழுதான். மகன் அழுவதைக்கண்ட தாயின் கண் களிலும் கண்ணீர் வர ஆரம்பித்தது. கையிலிருந்த கம்பியை தூக்கியெறிந்து விட்டு மகனை கட்டிப் பிடித்து இனிமேல் "களவு செய்யவேண்டாம்" என எச்சரித்தாள்.

ஒரு வாரமாக, மகன் திருடாமல் நல்ல பிள்ளையாக இருப்பதைக் கண்டு தாய் மிகவும் சந்தோஷமடைந்தாள். திடிரென, மகனின் புத்தக பையை சோதித்தபோது, ஐம்பது ரூபாய் தாள் இருப்பதைக்கண்ட அம்மா மிகவும் அதிர்ச்சியடைந் தாள். கட்டாயம் மகனுக்கு ஒரு நல்ல பாடம் இன்று கற்றுக்கொடுக்கவேண்டும். இனியும் தாமதித் தால் மகனின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் என்ற பயத்தில் தவித்தாள். ஒரு கம்பியை சூடாக்கி னாள். இன்று அம்மா தனக்கு சூடுபோடப் போகின் றாள் என மகனுக்கு விளங்கியது. "அம்மா, இனி நான் களவெடுக்க மாட்டேன்" என வழமைக்கு மாறாக சத்தமாக கத்தி அழ ஆரம்பித்தான். கண் களை மூடிக்கொண்டு "ஐயோ! அம்மா! வேண்டாம் சுடுபோடவேண்டாம்" என்று கதறினான். சூடாக்கிய கம்பியை கைக்கு அருகில் கொண்டுவந்த தாய், கண்ணிமைக்கும் வேளையில், "ஆ....ஆ..ஆ..." என்ற சத்தம் கேட்கவே, மகன் தன் கண்களைத் திறந்து பார்த்தான். அம்மாவின் கைகளில் இரத்தம் பீறிட்டு சிவப்பாக மாறியிருந்தது. தன் தாய் வேதனைப்படுவதை தாங்கமுடியாமல் தான் செய்த குற்றத்திற்கு மிகவும் வருந்தினான் மகன். தனது மகனுக்கான தண்டனையை தானாகவே அந்த தாய் விரும்பி ஏற்றுக்கொண்டாள்.

அருமை தம்பி, தங்கையரே! இப்படித்தான் நமது குற்றங்களுக்கான தண்டனையை ஒருவர் தானாக ஏற்றுக்கொண்டார். அவர் பாவம் செய்யாத வர். எமது பாவ சாபத்தைப் போக்க சிலுவையில் மரித்தார். ஏன் இயேசு அப்பா அப்படிச் செய்தார்? நம்மேல் அன்பு வைத்திருக்கின்றபடியினால்தானே. இன்று இயேசப்பாவிடம் வாருங்கள். உங்களை அவர் நேசிக்கின்றார். தனது செல்லப் பிள்ளையாக உங்களை ஏற்றுக்கொண்ட இயேசு அப்பாவிடம் உங்கள் சிறிய இருயத்தை கொடுப்பீர்களா? ❑

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered in the Department of
Post of Sri Lanka under
No. QD/96/News/2011

COLOMBO 22.11.11
SRI LANKA 024.00
PB1519 Rs CTS

To:

27.07.2009 500.00 TSUB NO 3342
REV J ANTONY SUTHAGAR
CTS
MARUTHANARMADAM
CHUNNAKAM NP

BACK TO THE BIBLE
சத்தியவசனம்

From :
Sathiyavasanam
P.O. Box 1012
Colombo.

2012ம் ஆண்டிற்கான சத்தியவசன வேதவசன கலண்டர்.

உங்கள் இல்லங்களை
கர்த்தரின் வார்த்தைகளினால்
அலங்கரிக்க....

2012ம் ஆண்டிற்கான
சத்தியவசன வேதவசன கலண்டரைப்
பெற்றுக்கொள்ள விரையுங்கள்....

சத்தியவசனம் சஞ்சிகை மற்றும்
அனுதினமும் தேவனுடன் தியான நூலுக்கான
புதிய சந்தாதாரர் இருவரை அறிமுகப்படுத்தி,
தங்களுக்குரிய ஒருவருட சந்தாவையும்
புதுப்பிப்பவர்களுக்கு கலண்டர் இலவசமாக
அனுப்பி வைக்கப்படும்.




நேரில்:
Back to the Bible Bookshop
120A, Dharmapala mawatta,
Colombo - 7.
Ph: 011-2695441, 011-2687040

Published by Back to the Bible Broadcast, P.O. Box 1012, Colombo.
Printed at New Ferrine Printers (Pvt) Ltd, No.19, "Saumya Uyana", Halpita, Polgasowita

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org